DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca


Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX



Member of National Ethnic Press and Media Council of Canada
27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1464 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday April 26, 2024


# ஒன்றாரியோ வாழ் தமிழ் மக்களை நான் பல காரணங்களுக்காக விரும்புகின்றேன்

## கனடிய தமிழர் வர்த்தக சம்மேளம் நடத்திய வருடாந்த வர்த்தக விருதுகள் வழங்கும் விழாவில் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் புகழாரம்





"கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களை நான் பல காரணங்களுக்காக விரும்புகின்றேன். அவர்கள் தாங்கள் ஈடுபாடு காட்டும் அனைத்து முயற்சிகளிலும் வெற்றிகளை ஈட்டி வருகின்றார்கள். இளையோரெ எடுத்துக்கொண்டால் அவர்கள் கல்வியில் மிகுந்த அக்கறை காட்டி கனடாவில் உயர் பதவிகளில் அமர்ந்துள்ளார்கள். மேலும் தமிழப் பண்பாடு மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில் நீங்கள் காட்டி வருகின்ற மதிப்பை நான் பல இடங்களில் கண்டு வியந்துள்ளேன். மேலும் எமது ஒன்றாரியோ அரசாங்கத்தின் உங்கள் பிரதிநிதிகளாக உள்ள லோகன் கணபதி அவர்கள் மற்றும் விஜேய் தணிகாசலம் அவர்கள் ஆகியோரின் எமது அரசாங்கத்திற்கு ஒரு பலமாகத் திகழ்கின்றார்கள்.. இவை அனைத்திற்குமாக நான் உங்களை பாராட்டுகின்றேன்".

இவ்வாறு கடந்த சனிக்கிழமையன்று கனடிய தமிழர் வர்த்தக சம்மேளம் மார்க்கம் நகரில் நடத்திய வருடாந்த வர்த்தக விருதுகள் வழங்கும் விழாவில் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் புகழாரம சூட்டினார்.மேற்படி சிறப்பான விழாவில் ஒன்றாரியோ முதல்வரை வரவேற்று சம்மேளனத்தின் தலைவர் முரளி சிவகுரு உரையாற்றினார்.

# இந்திய சமாதானப் படை – விடுதலைப் புலிகளுக்கிடையிலான போரை நிறுத்தவேண்டி உண்ணாநோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த அன்னை பூபதியின் 36ம் ஆண்டு நினைவுநாள்



காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளுக்கான தாய்மார்கள் என்ற வகையில், அன்னை பூபதியின் துணிச்சலுக்காகவும், அர்ப்பணிப்புக்காகவும், நமது நோக்கத்திற்கு வழிகாட்டியாக விளங்கும் அன்னை பூபதியை இன்று அவரது 36வது ஆண்டு நினைவு நாளைக் நினைவேந்துகின்றோம்.


காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும், தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப் பெறவும் எமது தொடர் போராட்டத்தின் 2616வது நாள் இன்று, ஏப்ரல் 16,2024, வவுனியா நீதிமன்றத்திற்கு முன்பாக, ஏ9 வீதியில் உள்ள இந்த பந்தலில் எமது பயணம் தொடர்கிறது. இவ்வாறு வவுனியாவில் தளம் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்து வரும் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் அறிவித்துள்ளது. (தொடர்ச்சி 9ம் பக்கம்)


தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிராம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr), Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE — RIGHT TEAM
MORTGAGE AGENT — Purchase & Refinance, First Mortgage, Second Mortgage, Commercial Mortgage, Equity Loan
ACCOUNTING — Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service
Mobile: 416.710.9150

உலகெங்கும் நன்கு அறியப்பெற்ற வருடாந்த நிகழ்வு
உதயன் சர்வதேச விருது விழா-2024
Uthayan International Awards Festival – 2024
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
மண்டபம்:- The Estate Banquet & Event Centre, 430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM



# ஸ்ரீ ஆதிபராசக்தி அம்பாள் தேவஸ்தானம்
# ஸ்ரீ கனகதுர்க்கை பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

## 24-வது ஆண்டு விழா (2024)


ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம் – டொரொன்ரோ

3021 Markham Road, Units 45, 46 & 47 Scarborough ON M1X 1L8

E-Mail: sakthi1226@gmail.com | Tel: 416-293-1226 | Fax: 416-293-1215







கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் கபடு வராத நட்பும் கன்றாத வளமையும்
குன்றாத இளமையும், கழுபிணி இலாத உடலும் சலியதா மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும் தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும் தடைகள் வராத கொடையும்
தொலைதா நிதியமும், கோணாத கோலும் ஒரு துன்பம் இலாத வாழ்வும் துய்ய நின்பாதத்தில்
அன்பும் உதவிப் பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய் அலைஆழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி அருள்வாமி அபிராமியே!

### அம்பிகை அடியார்க்ளே

ஸ்ரீபரம்பொருளினால் சிருஷ்டிக்கப்பட்ட இப்புண்ணிய பூவுலகின் கண்ணேயுள்ள ஐம்பெரும் கண்டங்களுள் செல்வச்செழிப்புடனும், விஞ்ஞான நுண்ணாராய்ச்சியினாலும் நிறைவுபெற்று விளங்கும் அமெரிக்கக் கண்டத்தின் வடபால் தலைசிறந்து நிகழும் உலக அதிசயங்களில் ஒன்றான நயகரா நீர் வீழ்ச்சியைத் தன்னகத்தே கொண்டதுமான நீர்வளம், நிலவளம், மலைவனம் போன்ற இயற்கை வளங்களால் நிறைந்து விளங்குவதுடன் – நூற்றுக்கும் மேற்பட்ட சைவ, வைஷ்ணவ திருக்கோயில்களால் நிறைந்து மிளிர்கின்ற கனடாத் திருநாட்டின் ஸ்காபரோ புண்ணிய ஸ்தலத்தில் கோவில் கொண்டு வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் அன்னையாம் ஸ்ரீ ஆதிபராசக்தி ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாளுக்கு நிகழும் மங்களகரமான குரோதி வருடம் சித்திரை 29 ம் நாள் **(11.05.2024)** சனிக்கிழமை திருவாதிரை நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய பகல் சுபவேளையில் 8:00 மணிக்கு மேல் 9:30 மணிக்குள் கொடியேற்றப்படும்.

**மே 25 ஆம் திகதி வைகாசி திங்கள் 12-ம் திகதி காலை 8:00 மணி தொடக்கம் 9:00 மணிக்குள் மூலத் நட்சத்திரம், மிதுன லக்கணத்தில் தேர் வடம் பிடிக்கப்படும்.**

இவ்விழாக்காலங்களில் நேர, கால, நிர்ணயம் தவறாமல் நடைபெறும் கிரியைகளில் அனைவரும் கலந்து சிறப்பிப்பதோடு பால், தயிர், பழங்கள், பூக்கள் போன்ற அபிஷேகத் திரவியங்களையும் வழங்கி அம்பாளின் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

**காலை**

8:30 மணிக்கு கும்ப பூஜை
9:30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
10:00 மணிக்கு யாக பூஜை
10:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
11:00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11:30 மணிக்கு வீதியுலா
12:30 மணிக்கு பிரசாதம் வழங்கல்

திருவிழாக்காலங்களில் அனைவரும் வருகை தந்து
அம்பிகையின் திருவருள் பெற்று வாழ்வீர்களாக!
இங்கனம் : **ப்ரம்மஸ்ரீ சந்திரமௌலி சாஸ்திரிகள்**

**மாலை**

5.00 மணிக்கு கும்ப பூஜை
5.30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
6.00 மணிக்கு யாக பூஜை
6:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
7.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
8.00 மணிக்கு வெளிவீதி வீதி வலம் வருதல்
8.45 மணிக்கு பிரசாதம் வழங்கல்

**புதிய வேத பாடசாலை ஒன்று ஆரம்பிக்கவுள்ளது.**
**மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளவும்.**

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

## இலங்கை அரசின் இனப் படுகொலையை தவிர்த்து அதற்கு பொறுப்பானவர்களோடு இணக்க அரசியலை தொடர முனைபவர்களை மக்கள் நிராகரிக்க வேண்டும்

எமது தாய்மண்ணை ஆண்டு சவைப்பதில் ஆசை கொண்டு அங்கு படையெடுத்தவர்கள் பலர். மீன் பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பில் பிறந்த 'மங்கையர் தியாகி' அன்னை பூபதி அவர்கள் உண்ணா நோன்பிருந்து தன் இன்னுயிரை மண்ணுக்கு ஈந்து 36 ஆண்டுகள் ஆனதை உலகெங்கும் உள் ஈழத் தமிழர்கள் நேற்றும் நினைவு கூர்ந்தார்கள். அவர் உண்ணா நோன்பிருந்துத எதற்காகவெனில். எம் மண்ணை சுவைக்கவும் சூறையாடவும் முகாம்களை அமைத்து அடக்குமுறைகளைப் பிரயோகித்த இந்திய சமாதானப் படையை மீளவும் தன்நாட்டுக்கு திருப்பி அழைக்கும் படியும் விடுதலைப் புலிகளோடு யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்கவும் என்ற கோரிக்கையை முன்வைத்து தான். ஆனால் அவரது கோரிக்கை நிறைவேற்றப்படாத காரணத்தால், தான் உண்ணா விரதத்தை ஆரம்பித்த ஒரு மாத காலத்திற்கு பின்னர் உடலை வருத்தி உயிரைத் துறந்தார் அந்த 'மங்கையர் தியாகி'

இதைப் போலவே. இலங்கை ஆங்கிலேயர் என்னும் கொடிய ஆட்சி செய்தவர்களிடமிருந்து விடுதலை பெற்ற 1948ம் ஆண்டு என்பது தமிழர்களுக்கான ஒரு பொற்காலத்தின் ஆரம்பம் என்று கூறிவிட முடியாது. சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்படும் ஆண்டிலிருந்து அதற்கு முந்திய நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் வெவ்வேறு வடிவில் இலங்கை என்னும் இயற்கை வளம் நிறைந்த தேசத்தை சுரண்டியும் வரிகளை விதித்தும் பயங்கரமான ஆயுதங்களால் பயத்தை ஏற்படுத்தி ஆட்சி செய்த காலப் பகுதியும் நீண்டதாகவே பார்க்கப்பட்டது.

அதற்கு பின்னைய காலப்பகுதியில் இலங்கையின் அரசியல் அதிகாரம் என்பது மிகவும் பலமும் சுகபோகங்களையும் கொண்டது என்பதை ஆங்கிலேயர் நிரூபித்துச் சென்றதால் அவர்களுக்கு சேவகர்களாக விளங்கியவர்களில் தமிழர்களாகவும் ஆங்கிலேயர்களாகவும் பறங்கியர்களாகவும் இருந்தவர்களில் கல்வி அறிவைத் தேடிக்கொண்டவர்கள் அரசியல் மீது ஆசை கொண்டவர்களாக வெள்ளையர்கள் அனுபவித்த அனைத்து சலுகைகளையும் அனுபவிக்கத் துடித்தார்கள். பின்னர் அதை அனுபவிக்கவும் தொடங்கினார்கள். இவ்வாறான அரசியல் பதவி-களைப் பெற்றுக்கொண்டவர்களான தமிழ் சிங்கள இஸ்லாமியத் தலைவர்கள் தங்களுக்குள் நட்பு பாராட்டிக் கொண்டார்கள். ஆனால் நடுத்தர வர்க்க மக்களும் ஏழைத் தொழிலாளர்களும் வஞ்சிககப்பட்டார்கள். இதனால் இனங்களுக்கு இடையில் பிரிவை ஏற்படுத்தினார்கள். தொடர்ந்து அரசியல் பதவிகளுக்காக இனவாதத்தையும் இன அடக்கு முறைகளையும் பிரயோகித்தார்கள் சிங்கள ஆட்சியாளர்கள்.

தொடர்ந்து தமிழ் இளைஞர்கள் அவர்களது அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடத் தொடங்கிய போது. அவர்களின் கோரிக்கைகளை கருத்தில் எடுக்காமல் அவர்களை அடக்கவும் அழிக்கவும் நினைத்தார்கள். இதனால் ஏற்பட்ட தொடர் விரிசல்களும் மோதலிகளும் எம் இனத்தை படுகொலை செய்யும் அளவிற்கு வந்தடைந்தது.

எமது மக்களையும் விடுதலைப் போராளிகளையும் கொன்றழித்த இலங்கை அரசும் அதன் காவல்நாய்களான இராணுவம் மற்றும் படைகளும் 'இனப்படுகொலையாளர்கள்' என்ற பெயரோடு எம்மோடு பார்க்கப்படுகையில். அந்தக் காரணத்திற்கு பொறுப்பானவர்கள் தகுந்த தண்டனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று குரல் எழுப்பி வரும் நீண்ட காலப்பகுதிக்கு பின்னரும். ஏம்மவர்கள் இணக்க அரசியல் செய்யும் நோக்கத்தை

கைவிடாமல் உள்ளார்கள். தேர்தல்களை நடத்துங்கள் என்று ஆட்சியாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கும் அதே வேளை அவர்களுக்கு ஆதரவு வழங்கவும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகிவிட்டதாகவும் செய்திகள் கசிந்துள்ளன.

எனவே. அன்னை பூபதி அவர்களைப் போல பலர் செய்த தியாகத்திற்கு மாற்றீடாக நாம் எமது கோரிக்கைகளிலிருந்து விடுபடாமல் இனப்படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதியைத் தேடும் முயற்சியிலிருந்து விலகாமல் செயற்பட வேண்டும் என்பதை இவ்வாரம் முக்கிய விடயமாக பதிவு செய்கின்றோம்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

## பண்பாடுகளின் அடிப்படையை மாற்ற நினைக்காதீர்கள்:

### நினைத்தால் எமது இனம் அழிந்துவிடும் என்கிறார் செஞ்சொற்செல்வர் இரா செல்வவடிவேல்

பு. கஜிந்தன்



பண்பாடுகள் நமக்குரியவை. அந்த அடிப்படையை மாற்ற நினைக்காதீர்கள், அவ்வாறு மாற்ற நினைத்தால் எமது இனம் அழிந்துவிடும் என செஞ்சொற்செல்வர் செல்வவடிவேல் தெரிவித்துள்ளார்.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வில் கலந்து கொண்டு மகாபாரத தொடர் சொற்பொழிவை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, மாற்றங்கள் உண்மைதான், ஆனால் பண்பாடுகள் நமக்கு உரியவை, அவற்றை மாற்ற நினைத்தால் நமது இனம் அழிந்துவிடும், எமது பண்பாட்டை காப்பாற்ற பெண்களால் தான் முடியும் என்றார்.



குறித்த சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வு இன்று காலை 10:45 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் இடம் பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக பஞ்ச புராணம் ஓதப்பட்டதை தொடர்ந்து மகாபாரத தொடர் சொற்பொழிவை ஓய்வு பெற்ற ஆசிரியர் செஞ்சொற் செல்வர் இரா.செல்வவடிவேல் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், தொண்டர்கள், அடியவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# கொற்றவத்தை றேஞ்சஸ் விளையாட்டு கழக மைதானத்தில் 6 இலட்சம் பெறுமதியான மின் வயர்கள் திருட்டு!





யாழ்ப்பாணம் வடமராட்சி கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டு கழக மைதானத்தில் பொருத்தப்பட்டிருந்த ரூபா 6 இலட்சம் பெரெஉமதியான மின் வயர்கள் திருடப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டு கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் றேஞ்சஸ் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டிகளை மின்னொளியில் நடாத்திவருகிறது. அது தற்போது அரையிறுதி போட்டி வரை வந்துள்ளது. இந்நிலையில் எதிர்வரும் வாரமளவில் இறுதிப் போட்டியை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலேயே ஞாயிற்றுக்கிழமை மைதானத்தில் மின்னொளிக்காக பொருத்தப்பட்டிருந்த வயர்களைவாடப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

களவாடப்பட்டுள்ள வயர்களின் தற்போதைய சந்தை பெறுமதி சுமார் 6 லட்சம் ரூபா எனவும் றேஞ்சஸ் கழகத்தினர் தெரிவிக்கின்றன்.

# வலம்புரி நாளிதழின் ஆசிரியருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு – யாழ். ஊடக அமையம் கண்டனம்


விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
கல்யாண மாலை
021 720 1005
1500/- + 500/-
பிரபாகரன் உயிருடன் நலமாக உள்ளார்
பழ.நெடுமாறன் பரபரப்புத் தகவல்
(சென்னை)
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் நலமாக உள்ளார் என உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார். (11ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் முன்னணி நாளிதழ்களுள் ஒன்றான "வலம்புரி" பிரதம ஆசிரியர் ந. விஜயசுந்தரம் வடக்கு ஆளுநரின் முறைப்பாட்டின் பேரில் 22-04-2024 அன்று திங்கட்கிழமை இலங்கை காவல்துறையின் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாண ஊடக அமையம் தனது வன்மையான கண்டனங்களை பதிவு செய்தது.

யாழ்ப்பாண ஊடக அமையம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மக்களிற்கு சேவையாற்றவென அரச நிதியிலிருந்து சம்பளம் பெறுகின்ற எந்தவொரு அரச பணியாளரும் தமது சேவைகள் தொடர்பில் சமானியன் ஒருவனது விமர்சனங்களையும் கேள்விகளையும் எதிர்கொள்ள வேண்டியவர்கள் என்பது பரகசியமான தொன்றல்ல. அவ்வகையில் வடக்கு ஆளுநரும் அவரது நிர்வாக கட்டமைப்பும் விதிவிலக்காகவும் முடியாது.

இலங்கை போன்ற ஜனநாயக நாடொன்றில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை கழுத்தை நெரித்து தடுக்க ஆட்சியாளர்கள் கங்கணங்கட்டிக்கொண்டு செயற்படுவது தெரிந்ததொன்றே. அதிலும் சமூக ஊடகங்களை முடக்கிவிடவென இலங்கை அரசு அனைவரது எதிர்ப்புக்களிற்கும் மத்தியில் அமுல்படுத்தியுள்ள நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை மீளாய்வு செய்யுமாறு சர்வதேச சமூகம் தொடர்ந்தும் வலியுறுத்தியே வருகின்றது.

ஆனால் ஆட்சியாளர்களோ தேர்தல் வெற்றிக்கான கனவில் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை முடக்கிவிட தொடர்ந்தும் முனைப்பு காண்பித்தே வருகின்றனர்.

இத்தகைய சூழலில் நல்லாட்யொன்றை எதிர்பார்த்து தீட்டப்பட்ட ஆசிரிய தலையங்கமொன்றிற்கு எதிராக அரச காவல்துறையினை பயன்படுத்தி நாளிதழ் ஒன்றின் ஆசிரியரை மிரட்டி அடிபணிய வடக்கு ஆளுநர் தனது அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளமை கேலிக்குரியதொன்றாகவே உள்ளது.

கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ள திராணியற்றதாகவோ அல்லது பாராட்டத்தக்க நிர்வாக கட்டமைப்பு ஒன்றினை தோற்றுவித்து பாராட்டு பெற்றுக்கொள்ளவோ வடக்கு ஆளுநர் தவறியே உள்ளமை இத்தகைய அச்சுறுத்தல் பாரம்பரியத்தினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் தேசிய ஊடகத்துறை கடந்து வந்திருந்த பாதையொன்றும் மகிழ்ச்சிகரமானதாக கடந்த காலங்களில் இருந்திருக்கவில்லை. அது மரணங்களும் வலிகளும் நிரம்பியதாகவே இருந்திருந்தது.

வடகிழக்கு தமிழர் தாயகங்களில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்கள் மீது கடந்த காலங்களில் அரச இயந்திரம் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகளால் 39 பேர் தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணித்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு உயிருக்கஞ்சி வெளியேறிய இருண்ட நாட்கள் பற்றியெல்லாம் வடக்கு ஆளுநர் சிலவேளைகளில் அறிந்திருக்காதிருக்கலாம்.

ஆனால் அவற்றினையெல்லாம் தாண்டி பயணித்த ஊடக வரலாறு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் நாளிதழ்களிற்கும் பணியாற்றிய ஊடகவியலாளர்களிற்கும் உள்ளதென்பதை மீண்டுமொரு முறை ஆளுநர் கவனத்திறகு எடுத்து செல்ல விரும்புகின்றோம்.

ஊடகவியலாளர்களது மரணங்களிற்கு நீதி கோரிய கோவைகள் பலவும் இதே காவல்துறை களஞ்சியங்களில் கிடப்பிலுள்ளமையும் இரகசியமொனதொன்றல்ல.

அவ்வகையில் மக்கள் வரிப்பணத்தில் நல்லதொரு மக்கள் சேவையினை வடமாகாணசபை வழங்கவேண்டுமென்ற எதிர்ப்பார்ப்பில் எழுதப்பட்ட ஆசிரிய தலையங்கங்களை தம்மை செம்மைப்படுத்த முன்வைக்கப்பட்டதொரு கருத்தாக கவனத்தில் கொள்ள வடக்கு ஆளுநர் தவறியமை நல்லாட்சி தொடர்பில் கேள்விகளையே எழுப்பி நிற்கின்றது.

கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை முடக்கிய பின்னராக முன்னெடுக்கப்படும் எந்தவொரு நிர்வாக நடவடிக்கையும் சர்வாதிகாரத்தின் சின்னமாக பார்க்கப்படுமென்பதை மீண்டும் சுட்டிக்காட்டவிரும்புவதுடன் வலம்புரி நாளிதழுடன் யாழ்.ஊடக அமையம் தோள்கொடுத்து தொடர்ந்தும் பயணிக்குமென்பதை ஆணித்தரமாக மீண்டுமொரு முறை சொல்லிக்கொள்ள விரும்புகின்றது என்றுள்ளது.

வெளியீட்டுப்பிரிவு
மத்திய குழு
யாழ்.ஊடக அமையம்.

# வாயில்லா ஜீவன்களை பொறுப்பேற்று பராமரிக்கும் சிவமங்கையர் தலைவி சிவசகோதரி சோதிநாயகி



சிவமங்கையர் தலைவி சிவசகோதரி சோதிநாயகி அவர்கள் கைவிடப்பட்ட வாயில்லா ஜீவன்களை பராமரிக்கும் பணியை முன்னெடுத்து வருகின்றார்.

அண்மையில் தீவகத்தில் இருந்து இறைச்சிக்காய் கடத்தப்பட்டபோது கைப்பற்றப்பட்டு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்ட பசுக்களை பொறுப்பெடுத்து அவரால் ஊர்காவற்துறை கரம்பனில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பசுக்கள் சரணாலயத்தில் பராமரித்து வருகின்றார். அவரின் இச் செயலை அனைவரும் பாராட்டி வருகின்றனர்.

ஏற்கனவே தீவகத்திலும் ஏனைய பல பிரதேசங்களிலும் மனிதநேய கல்வி ஆன்மீகப் பணிகள் பலவற்றை மேற்கொண்டு வரும் அறப்பணி அன்னை சோதிநாயகி அம்மையாருக்கு இவ்வாண்டுக்குரிய அன்பே சிவம் விருதை சைவ மகா சபை கடந்த சிவராத்திரியில் அறிவித்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மாகாணத்தின் புதிய சுகாதார சேவைகள் பணிப்பராக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர் பதவியேற்பு





வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்தியர் சமன் பத்திரன அவர்கள் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்தகாலத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளராக பணியாற்றியவர் இடமாற்றம் பெற்றுச் சென்ற நிலையில் வைத்தியர் சமன் பத்திரன அவர்கள் இவ்வாறு 23-04-2024 அன்றையதினம் பதவியேற்றுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் புதிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், எதிர்வரும் 4 வருடங்களுக்கு, நான் இன மத மொழிக்கு அப்பால் சென்று அனைவரது சுகாதார மேம்பாட்டிற்கும் என்னால் இயன்ற சேவையை வழங்குவேன் என்றார்.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# ஒரு மாதம் கடந்த நிலையிலும் கல்முனையில் தமிழர்களின் தொடர் போராட்டத்தை அரசு கண்டுகொள்ளவில்லை



சுமார் 40 வருடங்களாக கிழக்கில் இயங்கி வரும் உப பிரதேச செயலகத்தை, முழு அதிகாரங்களுடன் கூடிய பிரதேச செயலகமாக உருவாக்கி அப்பிரதேசத்தில் பரம்பரையாக வாழும் தமிழ் மக்களை அவர்கள் எதிர்நோக்கும் அடக்கு முறைகளில் இருந்து விடுவிக்குமாறு அரசை வற்புறுத்தி ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டத்திற்கு தீர்வு வழங்க ஒரு மாதம் கடந்துள்ள போதிலும் பிரச்சினைக்கு தீர்வை வழங்க அதிகாரிகள் தோல்வியடைந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மக்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கடந்த மார்ச் மாதம் 25ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தை 25-04-2024 அன்றும் முன்னெடுப்பதாக தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம், முழு அதிகாரங்களுடன் கூடிய பிரதேச செயலகமாக தரமுயர்த்த படாமையால் அப்பிரதேசத்தில் வாழும் தமிழர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒரு மாதத்திற்கும் மேலாக நடைபெற்று வரும் போராட்டம் யாருடைய உரிமையையும் பறிக்கும் போராட்டம் அல்ல என போராட்டத்தில் கலந்து கொண்டுள்ள அப்பிரதேச சிவில் சமூக ஆர்வலர் தாமோதரம் பிரதீபன் ஏப்ரல் 24 அன்றும் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

“இந்த போராட்டம் யாருக்கும் எதிரான போரட்டம் கிடையாது. யாருடைய உரிமைகளையும் பறிக்கின்ற போராட்டம் கிடையாது. யாருடைய எதனையும் கேட்கின்ற போராட்டம் கிடையாது. மாறாக 93ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான முழுமையான அதிகாரங்களை வழங்க வேண்டுமெனக் கோரியே நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம்.”

பல தசாப்தங்களாக அப்பகுதி மக்கள் அத்தியாவசிய அரச சேவைகளைப் பெறுவதில் தடை ஏற்பட்டுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் கடந்த ஏப்ரல் 14ஆம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு கடிதம் எழுதியிருந்தார்.

“மூன்று தசாப்தங்களாக, கல்முனை வடக்கு மக்கள் தீர்க்கப்படாத சவால்களுடன் போராடி வருகின்றனர், இது அவர்களின் அத்தியாவசிய அரசாங்க சேவைகளை அணுகுவதில் குறிப்பிடத்தக்க வகையில் தடையாக உள்ளது, இதனால் அவர்களின் அன்றாட வாழ்க்கையை பாதிக்கிறது.”

அரசாங்க அதிகாரிகளின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளினால் தமிழ், முஸ்லிம் சமூகத்தினரிடையே முறுகல் நிலை அதிகரித்து முரண்பாடுகள் ஏற்படக் கூடும் என தமிழ் மக்கள் பிரதிநிதி தனது கடிதத்தில் பிரதமருக்கு மேலும் தெரிவித்திருந்தார்.

“எமது கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கப்படவில்லை, மேலும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை உப பிரதேச செயலகமாக தரமிறக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை உப பிரதேச செயலகமாக தரமிறக்குவதற்கான இந்த நோக்கமும், கல்முனை தெற்கு பிரதேச செயலாளரின் ஜனநாயக விரோத மற்றும் சட்ட விரோதமான செயற்பாடுகளினால் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் கலவரமும் மோதலும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.”

மாவட்டச் செயலாளரும் கல்முனை தெற்கு பிரதேச செயலாளரும் கல்முனை வடக்கு “உப” பிரதேச செயலகமாக குறிப்பிட்டு செயற்படுவதை நிறுத்த வேண்டும் என சிவில் சமூக ஆர்வலர் தாமோதரம் பிரதீபனும் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

“கல்முனை வடக்கு பிரதேச செயலகம் ஒரு பிரதேச செயலகமாக இயங்கக்கூடாது என்ற முனைப்போடு பலர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக மாவட்ட செயலாளர் அதேபோன்று கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் தாங்கள் எழுதுகின்ற கடிதங்களை கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் என எழுதுகின்ற முயற்சி நிறுத்தப்பட வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்தே போராடிக்கொண்டிருக்கின்றோம்.”

அம்பாறை மாவட்டத்தில் 1986ஆம் ஆண்டு கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் ஸ்தாபிக்கப்பட்டதுடன், 1993ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய அந்த உப பிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாக மாற்றத் தீர்மானிக்கப்பட்டதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து, அன்றைய காலப்பகுதியில் உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண அரச செயலாளராகப் பணியாற்றிய எஸ்.ஏ. ஒபதகே கல்முனை பிரதேச செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தும், அது இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

தமது நிர்வாகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முஸ்லிம்கள் அதிகம் வாழும் பிரதேசத்தில் அமைந்துள்ள கல்முனை தெற்கு பிரதேச செயலகத்திற்கு செல்ல வேண்டியுள்ளதாக கல்முனை வடக்கு பிரதேசத்தில் வாழும் தமிழர்கள் தெரிவிக்கின்றனர்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் நிதி மற்றும் காணி அதிகாரங்களை இழந்து தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதியை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## 300 கடிதங்கள்

இது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகளுக்கு 300ற்கும் மேற்பட்ட கடிதங்கள் அனுப்பியும் எந்த பதிலும் இல்லை என சிவில் சமூக செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீபன் தெரிவிக்கின்றார்.

“அம்பபாறை மாவட்ட செயலாளர் மற்றும் விடயத்திற்க பொறுப்பான அமைச்சரின் செயலாளருக்கும் 300ற்கும் மேற்பட்ட கடிதங்களை பொது அமைப்புகளாக நாம் எழுதியுள்ளபோதிலும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இதுத் தொடர்பில் அம்பாறை மாவட்ட செயலாளரை பொது மக்கள் நேரடியாக சந்தித்து முறைப்பாடு அளித்த போதிலும் இந்த விடயத்தில் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது எனத் தெரிவித்தத மாவட்ட செயலாளர் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், செயலாளரிடம் பேசி தீர்வினைப் பெற்றுத்தருவதாக கூறி ஆறு மாதங்கள் கடந்துள்ளபோதிலும் இதுவரை உரிய தீர்வை பெற்றுத்தரவில்லை.”

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், 2023 நவம்பர் 28 ஆம் திகதி கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை கணக்காளர்கள் உள்ளிட்ட முக்கிய நியமனங்களை வழங்கி முழுமையான பிரதேச செயலகமாக மாற்றுமாறு நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தின் கீழ் 29 கிராம சேவையாளர் பிரிவுகள் இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# முத்தரிப்புத்துறையில் படகு இயந்திரத்தின் காற்றாடியில் சிக்கி இளம் குடும்பஸ்தர் மரணம்



(24-04-2024)

மன்னார் முத்தரிப்புத்துறை இல் தொழிலுக்கு சென்றவேளை கடலில் வைத்து படகு இயந்திரத்தின் காற்றாடி வெட்டியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவமானது 24-04-2024 காலையில் நிகழ்ந்துள்ளது.

உயிரிழந்தவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான தேவராஜா பீரிஸ் என்று தெரிய வருகிறது. உயிரிழந்தவரின் சடலம் தற்போது சிலாவத்துறை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

# மன்னார் ஊடகவியலாளர் எஸ்.ஜெகன் எழுதிய "மகா வம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரை பிரதேசமும்" நூல் வெளியீடு

(23-04-2024)




மன்னார் ஊடகவியலாளர் எஸ்.ஜெகன் எழுதிய "மகா வம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரை பிரதேசமும்" சங்க இலக்கிய நூல்கள் மூலமாக இடப் பெயராய்வு நூல் வெளியீடு 23-04-2024 அன்று சிறப்பாக வெளியிடு செய்யப்பட்டது.

மன்னார் ரோட்டரி கழகத்தின் நிதி அனுசரணையில் மன்னார் ஊடகவியலாளர் எஸ். ஜெகன் எழுதிய "மகாவம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரை பிரதேசமும்" என்னும் சங்க இலக்கிய நூல்கள் மூலமாக இடப்பெயராய்வு நுலானது மன்னார் ரோட்டரி கழகத்தின் தலைவர் பொறியியலாளர் ரொபேட் பீரிஸ் தலைமையில் 23-04-2024 செவ்வாய் கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினரான மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகர பிரதேச செயலாளர் ம.பிரதீப், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் கே. அரவிந்தராஜ், மடு பிரதேச செயலாளர் கீதபொன்கலன் நிஜாகரன், மன்னார் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த நூலானது மகா வம்ச விஜயனும் 700 தோழர்களும் இலங்கையில் வந்து இறங்கிய இடமானது மன்னார் கட்டுக்கரை பிரதேசம் என்பதை சங்க கால இலக்கிய நூல்களான கம்பரா மாயணம், தொல்காப்பியம் உட்பட மகாவம்ச நூல்களின் ஆதாரத்தோடும் தற்கால வரலாற்று ஆசிரியர்கள் வெளியீடு செய்த நூல்களின் துணையோடு கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த கட்டுக்கரை பிரதேசத்தின் தோற்றம், வளர்ச்சி அதன் சிறப்பு குன்றியதற்கான காரணங்களை கம்பரா மாயணம், மகா வம்ச நூல்கள் கூறும் இடப் பெயர்களையும் ,தற்போது மன்னார் மாவட்டத்தில் காணப்படும் இடம் பெயர்களையும் ஒப்பிட்டு ஆய்வு நூலாக வெளி வந்துள்ளது.

இந்த நூல் ஆய்வினை மன்னார் கல்வி வலய ஆசிரிய ஆலோசாக் சந்திர லிங்கம் ரமேஷ் வழங்கியிருந்தார்.

இந்த நூலின் பிரதிகளை பாடசாலைகள், நுலகங்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்குவதற்காக மேலதிக அனுசரணைகளை மன்னார் சட்டத்தரணி செல்வராஜா டினேசன், வங்காலை புனித ஆனாள் கல்வி சமூக அபிவிருத்தி குழுவினர், லட்சுமிகரங்கள் தொண்டு நிறுவனத்தினர், செட்டிகுளம் பிரதேச சமூக சேவையாளர் ஜெகன் சிவானந்தராசா போன்றோர் வழங்கியிருந்தார்கள்.








இந்த நிகழ்வில் மன்னார் ஊடக வியலாளர்கள், கல்வியாளர்கள் கலைஞர்கள், கலை இலக்கிய ஆர்வலர்கள், கலைஞர்கள் போன்றோர்கள் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சுகயீன விடுமுறை போராட்டம் முன்னெடுப்பு

(24.04.2024)





உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத் தர்களாக கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்கள் புதன்கிழமை (24-04-2024) மதியம் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அமைதி வழி போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

சம்பள உயர்வு, மேலதிக நேர கொடுப்பனவு, பதில் கடமை, காகிதாகி செலவுகள் உள்ளடங்களாக பல்வேறு கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதில் பல வருடங்களாக நீடித்து வரும் இழுபறி நிலை யை உடனடியாக நிவர்த்தி செய்து தருமாறு கோரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த கொடுப்பனவை அரச சுற்றறிக்கைக்கு அமைவாக 7500 ரூபாய் அதிகரித்து வழங்கு, பதில் கடமைக்கான கொடுப்பனவை வழங்கு, இல்லாவிட்டால் பதில் கடமையை நிறுத்து, வெளிக்கள கொடுப்பனவை 300 இல் இருந்து 3000 ரூபாவாக அதிகரி, காகிதாகி கொடுப்பனவை பெற்று தாருங்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு சம்பந்த மற்ற வேலைகளை திணிக்காதே போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

11 வருடங்களுக்கு மேலாக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்ற நிலையில் இதுவரை பிரச்சினைகள் தீர்க்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# மன்னாரில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினது முகவர் எனக் கூறி பல லட்சம் ரூபாய் மோசடி

(25-04-2024)

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பகுதியில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு விற்கு சொந்தமான காணியை பெற்று தருவதாக கூறி மாந்தை மேற்கு பகுதியில் பல நபர்களிடம் பல லட்சம் ரூபாய் லஞ்சமாக பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஏமாற்று நடவடிக்கையை முன்னெடுக்கும் குறித்த நபர் பள்ளமடுவில் உள்ள மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தில் வேலை செய்வதாகவும் கூறியுள்ளார்.

சுமார் 50 லட்சம் ரூபாய்க்கு மேல் குறித்த நபரிடம் பணம் வழங்கி உள்ளதாகவும் ஆனால் இதுவரை தமக்கு காணி கிடைக்கவில்லை என்பதால் விரக்தியடைந்த பாதிக்கப்பட்ட தரப்பினர் பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொருவராக முறைப்பாடு செய்து வருகின்றனர்.

இவர் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் இணைப்பாளர் எனவும் கூறி வருவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

எனவே காணியுடன் சம்பந்தமில்லாத ஒரு அரச ஊழியர் இவ்வாறான காணி முகவராக இருந்து லஞ்சம் பெற்றதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவரால் பெறப்படும் லஞ்சப் பணத்தை யாழ்ப்பாணத்தில் உள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு வின் அதிகாரிகளிடம் வழங்கியுள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் குறித்த நபர் கூறியுள்ளார் என கூறுகின்றனர்.

காணி மறு சீரமைப்பு ஆணைக்குழு ஏக்கருக்கு 30 ஆயிரம் தொடக்கம் ஐம்பது ஆயிரம் வரை லஞ்சம் பெற்றுக் கொண்டு பலருக்கு மாந்தை மேற்கு பகுதியில் காணி வழங்கி உள்ளதாகவும் தெரிய வருகின்றன.

அதில் ஒருவர் தான் 10 லட்சத்திற்கு மேல் லஞ்சம் வழங்கி காணி பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

குறித்த நபர் மட்டும் இன்றி வேறு முகவர்களும் உள்ளதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

ஆகவே இந்த கூட்டு லஞ்சம் பெறும் கும்பலை உடனடியாக கைது செய்து சட்டத்துக்கு முன் நிறுத்துவதுடன் இதற்கு பின்னால் உள்ள அதிகாரிகளையும் வெளிப்படுத்த வேண்டும் என பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# செம்மணியில் துடுப்பாட்ட மைதானம் அமையின் அயற்கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கும் கோடையில் கடும் நீர்ப்பஞ்சமும் ஏற்படும்

## பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை



செம்மணியில் முன்னர் உப்பளம் இருந்த பகுதியில் சர்வதேசத் துடுப்பாட்ட மைதானம் ஒன்றை அமைப்பதற்கான பகீரத முயற்சியில் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே செம்மணியில் கட்டுமானங்களை மேற்கொள்வதற்குப் பல்வேறு தரப்பினராலும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோது. வடக்கு மாகாணசபை அவற்றை நிராகரித்திருந்தது. தற்போது வடக்கு மாகாணசபையில் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில் செம்மணியில் சர்வதேசத்தரத்தில் துடுப்பாட்ட மைதானம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் சாதக பாதகங்களை ஆராயாது முடுக்கிவிடப்பட்டுள்ளன. செம்மணியில் இத் துடுப்பாட்ட மைதானம் அமைந்தால் அயற்பிரதேசங்கள் மாரியில் வெள்ளத்தில் மூழ்கும் அபாயமும், கோடையில் கடும் நீர்ப்பஞ்சத்துக்கு ஆளாகும் அபாயமும் நேரிடும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

செம்மணியில் சர்வதேசத் தரத்திலான துடுப்பாட்ட மைதானத்தை அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், செம்மணி உப்பளப்பகுதி குடா நாட்டின் பிரதான கடல் நீரேரிகளில் ஒன்றான உப்பாற்றுக் கடல் நீரேரியை அண்டிய தாழ்வான ஈரநிலம் ஆகும். வெளிப்பார்வைக்கு முக்கியத்துவமற்ற வெட்டவெளியாகத் தென்படும் இப் பகுதி சூழலியல்ரீதியாக இன்றிமையாத பங்களிப்புகளை வழங்கி வருகிறது. மாரியில் சுற்றயல் கிராமங்களில் இருந்து வரும் வெள்ள நீரைத்தேக்கி வைத்து நிலத்தடி நீர் மட்டத்தைப் பேணுவதோடு, நிலம் உவராவதையும் தடுக்கிறது. கூடவே, மேலதிகநீரைக் குடாநாட்டின் இன்னுமொரு கடல்நீரேரியான யாழ்ப்பாணக் கடல் நீரேரிவழியாகக் கடலுக்குள் அனுப்புவதன் மூலம் குடியிருப்புகளையும் வயல் நிலங்களையும் வெள்ளத்தில் மூழ்காமல் பாதுகாக்கவும் செய்கிறது.

அபிவிருத்தி முதலீட்டாளர்களின் வசதிகளையும் நலன்களையும் மாத்திரமே கருத்திற் கொள்வதாயின் அது நிலைபேறானதாக ஒருபோதும் அமையாது. அபிவிருத்தியில் சுற்றுச்சூழலினதும, அது சார்ந்த சமூகத்தினதும், நலன்கள் முன்னுரிமை பெறும்போதே அது நீடித்த - நிலையான - அபிவிருத்தியாக அமையும். அந்த வகையில் யாழ் நகரின் நுழைவாசல் என்பதற்காக மாத்திரமே செம்மணியில் துடுப்பாட்ட மைதானத்தை அமைப்பதற்கு முற்படுவது எவ்வகையிலும் ஏற்புடையது அல்ல. இதனை இதுவரையில் அபிவிருத்திகள் எதனையும் காணாத தீவகத்தின் பகுதிகளில் ஒன்றில் நிறுவுவதே சாலச்சிறந்தது ஆகும் என்றும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாண மாவட்டத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி – தேசிய நிகழ்ச்சி திட்டத்தை ஆரம்பித்து வைத்தார் அமைச்சர் டக்ளஸ்!

நாடளாவிய ரீதியில் குறைந்த வருமானங் கொண்ட குடும்பங்களுக்கு தலா 10 கிலோ கிராம் அரிசி வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தை 21-04-2024 அன்று யாழ் மாவட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

குறித்த அரிசி வழங்கும் தேசிய நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலகத்தில் அமைச்சரால் காலை 9.30 மணியளவில் மாவட்ட அரச அதிபர் பிரதீபனின் தலைமையில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



முன்பதாக 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 25 மாவட்டங்களில் சமுர்த்தி பயனாளிகள் உள்ளிட்ட 2.74 மில்லியன் குடும்பங்களை உள்ளடக்கியதாக, ஒரு குடும்பத்திற்காக 10 கிலோக்கிராம் நாட்டரிசியை இரண்டு மாதங்களுக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுருந்தது.

அதன் தொடர்ச்சிதாக அடையாளங் காணப்பட்ட குறைந்த வருமானங் கொண்டவர்களின் போசாக்கு மட்டத்தைப் பேணுவதற்கு ஏதுவாக இவ்வாண்டிலும் குறித்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டது.



அதற்கிணங்க, சிறிய மற்றும் நடுத்தரளவிலான நெல் ஆலை உரிமையாளர்களை இணைத்து மாவட்டச் செயலாளர்கள் மூலமாக அடையாளங் காணப்பட்டுள்ள குறைந்த வருமானங் கொண்ட 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு தலா 10 கிலோக்கிராம் அரிசி வழங்கும் வேலைத்திட்டத்தை இரண்டு மாதங்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இதனடிப்படையிலேயே இன்றையதினம் யாழ் மாவட்டத்தில் சம்பிரதாயபூர்வமாக அமைச்சரால் குறித்த அரிசி வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# புலம் பெயர்ந்த தமிழ் முதலாளிகள் தாயக அரசியலில் தலையிடுகிறார்களா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



"கட்சிகள் விற்பனைக்கு உண்டு உங்களுக்கு வேண்டுமா?" என்று என்று ஒரு புலம்பெயர்ந்த தமிழ் முதலாளியின் சார்பாக பேசிய ஒருவர் தன்னிடம் கேட்டதாக சுமந்திரன் ஒரு நேர்காணலில் கூறியிருக்கிறார்.

புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகள் நாட்டின் அரசியலில் தலையீடு செய்வது என்பது ஒரு புதிய தோற்றப்பாடு அல்ல. புலம்பெயர்ந்த தமிழர் சமூகம் எப்பொழுது எழுச்சி பெறத் தொடங்கியதோ அப்பொழுதிருந்தே அது தாயகத்து அரசியலின் மீது தலையிடத் தொடங்கிவிட்டது. இது ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல, ஏனைய எல்லா புலப்பெயர்ச்சி நிகழ்ந்த சமூகங்களுக்கும் பொருந்தும். சீக்கியர்களுக்கும் பொருந்தும். சில ஆபிரிக்க சமூகங்களுக்கும் பொருந்தும். புலப்பெயர்ச்சி மூலம் வெவ்வேறு நாடுகளில் குடியேறிய மக்கள் அங்கு நிதி ரீதியாகத் தங்களைப் பலப்படுத்திக் கொண்ட பின் குறிப்பாக முதலாம் தலை முறை புலம்பெயரிகள் தாயகத்தின் அரசியல் நடவடிக்கைகளின் மீது ஏதோ ஒரு விதத்தில் செல்வாக்குச் செலுத்த முற்படுவதுண்டு. கடந்த நூற்றாண்டில் இஸ்ரேல் என்ற நாடு உருவாகியது அவ்வாறுதான். யூத புலப் பெயர்சியின் விளைவுதான் நவீன இஸ்ரேல். இஸ்ரேல் என்ற நாடு உருவாகியதோடு நவீன அரசியலில் புலம்பெயர் சமூகத்தின் சகாப்தம் துலக்கமான விதத்தில் மேல் எழுந்து விட்டது.

தமிழர்களைப் பொறுத்தவரை புலம்பெயர்ந்த சமூகம் ஈழப் போரின் காசு காய்க்கும் மரமாக காணப்பட்டது. 2009க்கு பின் நீதிக்கான போராட்டத்தின் கூர் முனையாகக் காணப்படுவது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தான். குறிப்பாக தாயகத்துக்கு வெளியே அதிகரித்த தொகையில் தமிழர்கள் வாழ்வது கனடாவில். தமிழ் புலம்பெயர் சமூகத்தைப் பொறுத்தவரை அதிகம் செல்வாக்கு மிக்க, ராஜதந்திர அந்தஸ்து மிக்க ஒரு புலம்பெயர் சமூகமாக கனேடியத் தமிழர்கள் வளர்ந்து வருகிறார்கள். அதனால்தான் பரிகார நீதியை கோரும் தமிழ் மக்களின் போராட்டத்தில் முக்கிய முன்னேற்றங்கள் அங்கு ஏற்பட்டன.

இவ்வாறான ஒரு வளர்ச்சியின் பின்னணியில் வைத்துப் பார்க்கும் பொழுது, ஆயுதப்போராட்டத்தின் போதும் அதற்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகளிலும் தாயகத்தைக் கட்டியெழுப்பிய விடயத்திலும் சரி, தாயகத்தின் அரசியலில் செல்வாக்கு செலுத்தும் விடயத்திலும் சரி, புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் நிர்ணயகரமான ஒரு பாத்திரத்தை வகித்து வருகின்றது.

தொலைவில் இருந்து கொண்டு அதாவது கள யதார்த்தத்துக்கு வெளியே இருந்து கொண்டு தாயகத்து அரசியலை இயக்குவதில் வரையறைகள் உண்டு. அதில் கோளாறுகளும் உண்டு. குழப்பங்களுக்கும் இடம் உண்டு. என்றாலும் எல்லா விதமான விமர்சனங்களுக்கும் அப்பால் தமிழ் அரசியலைப் பொறுத்தவரை புலம்பெயர் சமூகத்தின் பங்களிப்பு என்பது பிரித்துப் பார்க்க முடியாத ஒன்று. ஈழத் தமிழ் அரசியல் சமூகம் என்பது புலம்பெயர்ந்த தமிழர்களையும் உள்ளடக்கியதுதான். யாராவது புலம்பெயர்ந்த தமிழர்களை அந்த அரசியல் சமூகத்தில் இருந்து வேறாக்கிப் பார்க்கிறார்கள் என்றால் அல்லது பிரித்துப் பார்க்க விரும்புகிறார்கள் என்றால் அவர்கள் தமிழ்த் தேசிய நீக்கத்தைச் செய்ய முற்படுகிறார்கள் என்று பொருள்.

2009க்குப் பின் தமிழ் மக்கள் தங்கள் சொந்த சாம்பலில் இருந்து மீண்டு எழுவதற்கு பெரிதும் உதவியது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தான். தாயகத்தில் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் நிதி உதவிகளையும் தார்மீக ஆதரவையும் வழங்குவது புலம்பெயர்ந்த தமிழ் சமூகம்தான். ஐநாவில் மனித உரிமைகள் பேரவையிலும் ஏனைய உலகப் பெரு மன்றங்களிலும் தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தின் கூர் முனைகளாகக் காணப்படுவது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தான்.

கடந்த 15 ஆண்டுகளிலும் தாயக்கத்தில் உள்ள பெரும்பாலான கட்சிகளுக்கு புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் நிதி உதவி வழங்கியிருக்கின்றது. தாயகத்தில் நடந்த பெரும்பாலான போராட்டங்களின் பின்னணியில் புலம்பெயர்ந்த தமிழ் செயற்பாட்டாளர்கள் காணப்படுகின்றார்கள். எழுக தமிழாகட்டும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணியாகட்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டங்கள் ஆகட்டும், பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்களாகட்டும், எல்லாவற்றிலும் புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பு உண்டு.

மிகக்குறிப்பாக சுனாமி தாக்கிய பொழுதும் அதன்பின் பெருந் தொற்று நோய்க் காலத்திலும் அண்மை ஆண்டுகளில் பொருளாதார நெருக்கடியின் போதும் தாயகத்துக்கு புலம்பெயர் தமிழ் சமூகம் பெருமளவுக்கு உதவிகளைச் செய்திருக்கின்றது.

இந்த உதவிகள் ஒரு மையத்தில் இருந்து திட்டமிடப்படவில்லை; பொருத்தமான புள்ளி விவரங்களின் அடிப்படையில் இந்த உதவிகள் வழங்கப்படவில்லை; அவ்வாறு உதவிகளை செய்யும் பலர் அதன் மூலம் தங்களுடைய தனிப்பட்ட இமேஜைக் கட்டி எழுப்ப முற்படுகின்றார்கள் உதவிகளின் மூலம் தாயகத்தில் உள்ள செயற்பாட்டாளர்களை சோம்பேறிகள் ஆக்குகின்றார்கள் தாயகத்தில் செயல்படும் கட்சிகளையும் அமைப்புகளையும் பிரித்துக் கையாள முற்படுகிறார்கள்... போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உண்டு. குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கங்களுக்கு இடையே பிரிவினையை உண்டாக்கியதில் புலம்பெயர்ந்த தமிழ் நபர்களுக்கு பங்கு உண்டு என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அவ்வாறே தமிழரசு கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிரிவிலும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் தலையீடு உண்டு என்ற குற்றச்சாட்டு உண்டு. குறிப்பாக தமிழரசுக் கட்சிக்குள் தேர்தல் நடந்த பொழுது அதில் ஒரு வேட்பாளரை புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் சிலர் ஆதரித்ததாக அவதானிக்கப்பட்டுள்ளது. இப்பொழுதும் தமிழரசு கட்சிக்குள் இரு அணிகள் வெளிக்கிளம்பியிருக்கும் ஒரு பின்னணியில், புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தில் இருப்பவர்கள் இந்த இரண்டு அணிகளையும் ஆதரிக்கிறார்கள். எதிர் எதிராக நின்று மோதுகிறார்கள். அதை முகநூலில் காணலாம்.

எனவே ஈழத்தமிழ்த் தேசிய அரசியல் சமூகம் எனப்படுவது புலம்பெயர்ந்த தமிழர்களையும் உள்ளடக்கிய ஒன்றுதான். அதிலிருந்து புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தை பிரித்துப் பார்க்க முடியாது. ஆனால் அதற்காக கள யதார்த்தத்துக்கு வெளியே இருந்து கொண்டு தாயகத்தின் அரசியலின் மீது ரிமோட் கொன்ட்ரோல் செய்ய முற்படுவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

சுமந்திரன் மேற்சொன்ன அந்த நேர்காணலில் புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் தாயக அரசியலில் செல்வாக்கு செலுத்துவதை கடுமையாக விமர்சிக்கின்றார். புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தொடர்பாக ஒரு தமிழ் அரசியல்வாதி குறிப்பாக தமிழ்த் தேசியக் கட்சி ஒன்றைச் சேர்ந்தவர் அவ்வாறு கடுமையான வசனங்களைப் பயன்படுத்தி விமர்சித்திருப்பது இதுதான் முதல் தடவை. வெளியில் இருந்து வரும் முதலீட்டாளர்கள் பெரும்பாலும் நாட்டில் புலனாய்வுத் துறையின் அனுமதியோடுதான் இயங்க முடியும். எனவே அவர்களுடைய நடவடிக்கைகளில் தென்னிலங்கையில் இருப்பவர்களின் நிகழ்ச்சி நிரல் மறைமுகமாக செல்வாக்குச் செலுத்த முடியும் என்ற பொருள்பட சுமந்திரன் அந்த நேர்காணலில் பதில் கூறியிருக்கிறார். தாயகத்தை நோக்கி வரும் புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் இலங்கை அரசாங்கத்தின் புலனாய்வுக் கட்டமைப்பின் கண்காணிப்பின் கீழ் தான் இயங்க முடியும் என்பது ஒரு யதார்த்தம். அதுவே இன முரண்பாட்டின் ஒto பிரதிபலிப்புத் தான். இனவாதத்தின் பிரதிபலிப்புத் தான். அவ்வாறு புலனாய்வுத் துறையின் கண்காணிப்புடன் இயங்கும் புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் அரச புலனாய்வுத் துறையின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கிறார்கள் என்று அவசரப்பட்டுத் தீர்ப்பு எழுதி விட முடியாது.

அந்த நேர்காணலில் சுமந்திரன் கூறியது போல ஒரு புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர் தென்னிலங்கையில் இரண்டு கட்சிகளை விலைக்கு வாங்கி இருப்பதாக ஏற்கனவே செய்திகள் வெளிவந்தன. ஜனாதிபதித் தேர்தலில் அதில் ஒரு கட்சிப் பதிவை உபயோகித்து தாயகத்தில் உள்ள கட்சிகளை ஒருங்கிணைத்து ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கும் ஒரு முயற்சி முன்னெடுக்கப்பட்டது. அந்த முயற்சியில் ஈடுபட்ட புலம்பெயர்ந்த தமிழர் ஒருவர் அது தொடர்பாக கட்சிகளைச் சந்தித்து உரையாடிய பொழுது ஒரு விடயத்தை வெளிப்படையாகவே தெரிவித்தார். ரணில் விக்கிரமசிங்கதான் நாட்டுக்குப் பொருத்தமான தலைவர். எனவே அடுத்த ஜனாதிபதியாக அவரைத் தெரிவு செய்யும் நோக்கத்தோடுதான் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்த வேண்டியுள்ளது என்பதே அவர் முன் வைத்த தர்க்கம் ஆகும்.

அந்த முயற்சி பின்னர் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதே சமயம் தமிழரசுக் கட்சிக்குள் தற்பொழுது வெளிப் படையாகத் தெரியும் பிளவுக்குள் ஒரு அணியை அதாவது சிறீதரன் அணியை புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் அதிகமாக ஆதரிப்பது தெரிகின்றது. சுமந்திரன் ஏற்கனவே தமிழ்த் தேசிய நீக்கம் செய்கின்றார் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகியவர். ஒஸ்ரேலியாவிலும் கனடாவிலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் அவருக்கு கடுமையாக எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள். அதே சமயம் கனடாவிலும் ஒஸ்ரேலியாவிலும் அவருக்கு ஆதரவு அணியும் உண்டு.

தமிழரசுக்கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒப்பீட்டளவில் அதிகமாக தனக்கு எதிராகக் காணப்படுவதை குறித்து சுமந்திரன் விசனம் அடைந்திருப்பதாகத் தெரிகிறது. அதனால்தான் தாயகத்தின் அரசியலில் புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகள் முதலீடு செய்வதற்கு எதிராகவும் தலையீடு செய்வதற்கு எதிராகவும் அவர் கடுமையான விமர்சனங்களை முன் வைத்திருக்கின்றார்.

கடும் தேசியவாதம் கதைக்கும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் மறைமுகமாக தென்னிலங்கையின் நிகழ்ச்சி நிரலைப் பலப்படுத்துகிறது என்ற பொருள்படவும் அவர் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார். கடும் தேசிய வாதம் என்று அவர் எதனை வரையறுக்கிறார் என்பதனை முதலில் அறிய வேண்டும். அதேசமயம் தமிழ்த் தேசிய அரசியலில் தீவிர நிலைப்பாடுகளை எடுப்பவர்கள் தென்னிலங்கையில் உள்ள இனவாதத்தையும் தீவிர நிலைக்குத் தள்ளுவார்கள் என்ற ஒரு தர்க்கத்தை அவர் முன்வைக்கின்றார். தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயத்தையும் அவர் அப்படித்தான் பார்ப்பதாகத் தெரிகின்றது.

தமிழ் மக்கள் எதிர்ப்பு காட்டினால் அல்லது தமிழ் மக்கள் தீவிரமான நிலைப்பாடுகளை எடுத்தால் அது சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தை உசுப்பேத்திவிடும் என்ற வாதம் கடந்த 15 ஆண்டுகளாக சம்பந்தர் சுமந்திரனை போன்றவர்களால் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றது. அப்படியென்றால் சம்பந்தரும் சுமந்திரனும் பலமாக இருந்த ஒரு காலகட்டத்தில் ஐநாவோடு இணைந்து நிலை மாறு கால நீதியை உருவாக்க முற்பட்ட ஒரு காலகட்டத்தில், சிங்கள மக்களை நோக்கி அளவுக்கும் அதிகமாக இறங்கிச் சென்றதன் விளைவாக எதைப் பெற்றார்கள்?

அதற்குரிய பதிலை சுமந்திரன் 2021 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து கூறினார். தமிழ்க்கட்சிகளை ஒருங்கிணைத்து ஐநாவுக்கு ஒரு கூட்டு கடிதத்தை அனுப்புவதற்காக கூட்டப்பட்ட அந்த சந்திப்பில், அவர் சொன்னார்... 6 ஆண்டுகளாக அதாவது 2015 ஆம் ஆண்டில் இருந்து தொடங்கி ஒரு பரிசோதனையை முன்னெடுத்தோம். அதில் தோற்றுப் போய்விட்டோம் என்று. அவர் பரிசோதனை என்று கூறியது நிலை மாறு கால நீதியை.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகத்தை விடவும் ஒப்பீட்டளவில் அதிகரித்த ஜனநாயக வெளிக்குள் சுதந்திரமாக வாழ்கிறார்கள். எனவே அவர்கள் எதிர்ப்பைக் கட்டுப்பாடு இன்றி வெளிப்படுத்துவார்கள். அதனால் அவர்களுடைய தேசிய நிலைப்பாடுகள் தீவிரமானவைகளாக இருக்கலாம். அவை சிலசமயம் தாயகத்தில் சட்டரீதியாக தடை செய்யப்பட்டவைகளாகவும் இருக்கலாம். நிதி உதவி செய்வதன் மூலம் தாயகத்து அரசியலின் மீது அவர்கள் ரிமோட் கண்ட்ரோல் செய்ய முற்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டிலும் உண்மைகள் உண்டு. ஆனால் மேற்சொன்ன விமர்சனங்களுக்காக புலம்பெயர்ந்த தமிழர்களை எதிர் நிலைக்குத் தள்ளக் கூடாது. புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகளை எதிரியின் ஆட்கள் என்ற பொருள்பட விமர்சிக்கவும் முடியாது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகத்தின் நீட்சிதான். அவர்களும் ஈழத்தமிழ் ரத்தந்தான். ஈழத்து தமிழர்களுக்கு ஒரு துன்பம் என்றால் கொதித்து எழுவது அவர்களும் தமிழகமும் தான்.

தாயகத்தில் கட்சிகள் ஒழுங்காக இயங்கினால், கட்சிகள் ஒற்றுமையாக இருந்தால், புலம்பெயர்ந்த தமிழர்கள் அங்கே தலையிடுவதில் வரையறைகள் இருக்கும். ஒரு கட்சிக்குள்ளேயே இரண்டு அணிகள் தோன்றும் பொழுது அதை புலம்பெயர்ந்த தமிழர்கள் மட்டுமல்ல, அரசு புலனாய்வுத் துறையும் கையாளத்தான் பார்க்கும். எனவே இங்கு கடுமையாக விமர்சிக்கப்பட வேண்டியது ஒரு மூத்த கட்சியை இரண்டாக உடைக்கும் சூழ்ச்சி நோக்கத்தைக் கொண்டவர்கள்தான். அந்த உடைவுக்குள் முதலீடு செய்ய முற்படும் புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகள் அல்ல.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இந்திய சமாதானப் படை – விடுதலைப் புலிகளுக்கிடையிலான போரை நிறுத்தவேண்டி உண்ணாநோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த அன்னை பூபதியின் 36ம் ஆண்டு நினைவுநாள்

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளுக்கான தாய்மார்கள் என்ற வகையில், அன்னை பூபதியின் துணிச்சலுக்காகவும், அர்ப்பணிப்புக்காகவும், நமது நோக்கத்திற்கு வழிகாட்டியாக விளங்கும் அன்னை பூபதியை இன்று அவரது 36வது ஆண்டு நினைவு நாளைக் நினைவேந்துகின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும், தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப் பெறவும் எமது தொடர் போராட்டத்தின் 2616வது நாள், ஏப்ரல் 16,2024, வவுனியா நீதிமன்றத்திற்கு முன்பாக, ஏ-9 வீதியில் உள்ள இந்த பந்தலில் எமது பயணம் தொடர்கிறது.

அன்னை பூபதி அவர்களின் அர்ப்பணிப்பான தியாகம் பற்றி குறிப்பிடுவதானால். 1987 இன் இறுதிப் பகுதியில் வடக்கு கிழக்கில் முகாம்கள் அமைத்திருந்த இந்திய சமாதானப் படை, மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடையே போர் நிறுத்தத்தை ஏற்படுத்த இந்திய அரசைக் கோரி உண்ணாவிரதம், 19 மார்ச் 1988 அன்று மாமாங்கம் பிள்ளையார் கோவிலில் ஒரு மாதம் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து 19 ஏப்ரல் 1988 அன்று சாவடைந்தார்.

இன்று, ஒரு மாபெரும் தியாகியின் நினைவைப் போற்றுகிறோம், அன்னை பூபதியின் உன்னத தியாகத்திற்கு வணக்கம் செலுத்துகிறோம். அன்னை பூபதி நம் வரலாற்றில் ஜாம்பவான்களாக விளங்கிய உன்னத தியாகிகளில் ஒருவராக நமது உயர்ந்த மதிப்பைப் பெற்றுள்ளார்.

ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, குடும்பத்தின் தாய்வழித் தலைவியாக, பூபதி அம்மா தனது சாதாரண வாழ்க்கையையும் இருத்தலியல் பற்றுதலின் பிணைப்புகளையும் தாண்டி தனது தேசத்தின் விடுதலைக்காக தனது வாழ்க்கையை தியாகம் செய்தார்.

முற்றிலும்! அன்னை பூபதி, அல்லது அம்மா பூபதி, இலங்கையில் நீதி மற்றும் மனித உரிமைகளுக்கான தமிழர் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு அசாதாரண பெண்மணி. அவளுடைய வாழ்க்கையைப் பற்றிய சில நுண்ணறிவுகள் இங்கே:

அன்னை பூபதி, முதலில் பூபதி கணபதிப்பிள்ளை என்று அழைக்கப்படுகிறார், நவம்பர் 3, 1932 இல், இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வரலாற்றுத் தமிழ் கிராமமான கிரனில் பிறந்தார்.

அவர் 10 குழந்தைகளின் தாயாக இருந்தார்.

அவர் வாழ்ந்த காலத்தில் நடந்த தனித்தனி சம்பவங்களில், அவரது இரண்டு மகன்கள் இலங்கை அரசுப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த சோகமான நிகழ்வுகள் நீதியையும் சமாதானத்தையும் தொடர அவரது உறுதியை தூண்டியது.

மோதலின் போது, அன்னை பூபதி இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையினரால் மனித உரிமை மீறல்களை கண்டார்.

அன்னை பூபதி அமைதிக்கான போராட்ட வடிவமாக 1988 மார்ச் 19 அன்று மாமாங்கம் பிள்ளையார் கோவிலில் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்.

இந்திய அரசாங்கம் ஜீமுகு எனப்படும் இந்திய சமாதானப் படை மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இடையே போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் கோரினார்.

அவரது உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோதிலும், அவர் ஏப்ரல் 19, 1988 அன்று சோகமாக மரணம் அடையும் வரை தனது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்தார்.

அன்னை பூபதியின் தியாகத்தை தலைவர் பிரபாகரன் பாராட்டினார் இவரது தியாகம். தமிழ்த் தாய்மார்களின் வீரத்தின் அடையாளமாகவும், தமிழர் போராட்ட வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க தருணமாகவும் இது திகழ்கிறது.

நீதி மற்றும் அமைதிக்கான அவரது உறுதியான அன்னை பூபதியின் அர்ப்பணிப்பு மற்றும் அவரது தைரியம் மற்றும் தியாகம், தலைமுறைகளுக்கு காலத்தால் அழியாத உத்வேகமாக விளங்கும் அவரது நினைவு நாளை தமிழர்கள் நினைவுகூருகின்றனர். அவர்களின் உரிமைகள் மற்றும் அவர்களின் இனத்தின் நலனுக்காக போராடும் தனிநபர்களின் வீரம் மற்றும் வலிமையை அவரது தியாக அர்ப்பணிப்பு எடுத்துக்காட்டுகிறது.

நன்றி செயலாளர்
கோ. ராஜ்குமார்
தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம்.



## வவுனியாவில் அன்னை பூபதியின் 36 ஆவது ஆண்டு நினைவு தினம்

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் அன்னை பூபதியின் 36 ஆவது ஆண்டு நினைவு தினம் வெள்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் தமது பிள்ளைகளுக்கு நீதி கேட்டு 2616 ஆவது நாளாக வவுனியா, கண்டி வீதியில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டப் பந்தலில் குறித்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதன் போது அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு ஒளி தீபம் ஏற்றி மலர் அஞ்சலியும் செலுத்தப் பட்டது. இதில் காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவினர்கள் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.


# MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# கனடாவில் இடம்பெற்ற "நூல்களின் சங்கமம்" புத்தகக் கண்காட்சி

- குரு அரவிந்தன்





சென்ற சனிக்கிழமை 20-04-2024 அன்று கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 30வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாகவும், உலகப்புத்தகத் தினத்தைக் கொண்டாடும் முகமாகவும் ரொறன்ரோவில் கனடியத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டும், விற்பனைக்கும் கனடியத் தமிழ் எழுத்தாளர் இணையத்தால் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.



கனடாவின் பல பாகங்களில் இருந்தும் மிகப் பெரிய அளவில பொதுமக்கள் கலந்து கொண்டு இந்த நிகழ்வுக்கு ஆதரவு நல்கினார்கள். முக்கியமாக இளையதலைமுறையினரும், சிறுவர்களும் பெற்றோருடன் வந்து கலந்து கொண்டு தமக்கு விரும்பிய நூல்களை வாங்கிச் சென்றது குறிப்பிடத் தக்கது. இதன் மூலம் அடுத்த தலைமுறையினரிடம் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவும், இந்த மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்க வேண்டும் என்ற எழுத்தாளர் இணையத்தின் ஆதங்கத்தை நிறைவேற்றவும் இந்த நிகழ்வு பெரும் உதவியாக இருந்தது.

கனடாவில் இதுபோன்றதொரு தமிழ் நூல்களின் சங்கம நிகழ்வு நடப்பது இதுவே முதற்தடவையாகும். சுமார் 50 மேற்பட்ட நூலாசிரியர்கள், பதிப்பகத்தினர், ஊடக நிறுவனங்கள் தங்கள் ஆக்கங்களை இந்த நிகழ்வில் காட்சிப்படுத்தி இருந்தனர். கனடா எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், கட்டுரைத் தொகுப்புகள், கவிதைத் தொகுப்புகள், மஞ்சரிகள், மற்றும் ஏனைய தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் என்று பல விதமான இலக்கிய ஆக்கங்களும் இடம் பெற்று இருந்தன.

கலை 10 மணியளவில் மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து கனடா தேசியப்பண், தமிழ்த்தாய் வாழ்த்து, அகவணக்கம் ஆகியன இடம் பெற்றன. தொடர்ந்து பொருளாளர் க. ரவீந்திரநாதனின் வரவேற்புரையும், தலைவர் அகணி சுரேஸ் அவர்களின் தலைமையுரையும் இடம் பெற்றன. அடுத்து மதிப்புக்குரிய பாஸ்ரர் ஜெயானந்தசோதி அவர்களின் வாழ்த்துரையும், தொடர்ந்து துணைத்தலைவரும், ஒழுங்கமைப்பாளர்களில் ஒருவருமான எழுத்தாளர் குரு அரவிந்தனின் உரையும் இடம் பெற்றன.

குரு அரவிந்தன் தனது உரையில் ரொறன்ரோவில் நடக்கும் இது போன்ற முதல் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும், குறிப்பாக வெற்றிகரமாக இந்த நிகழ்வு நடப்பதற்கு உதவியாக இருந்த இளைய தலைமுறையினருக்கும், நூல்களைக் காட்சிப்படுத்தியவர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார். பொது அறிவை விருத்தி செய்யவும், எமது வரலாற்றைப் புரிந்து கொள்ளவும், எங்கள் மொழி இந்த மண்ணில் நிலைத்து நிற்கவும் இது போன்ற நூல்களின் கண்காட்சி இளைய தலைமுறையினருக்குப் பெரிதும் உதவியாக அமையும் என்பதை எடுத்துக் குறிப்பிட்டு,




இதுபோன்ற ஒரு நிகழ்வை ஏற்படுத்திக் கொடுத்த கனடா தமிழ் எழுத்தாளர் இணைய நிர்வாகக் குழுவினருக்கும், தன்னார்வத் தொண்டர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் போது சுமார் 10 எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை வெளியிட்டும், அறிமு-கம் செய்தும் வைத்தனர். இரண்டு மணியளவில் கனடாவில் பிறந்து வளர்ந்த இளைய தலைமுறையினர் பங்குபற்றிய பட்டிமன்றம், நடனம், உரைகள், திருக்குறள் சார்ந்த உரைகள் போன்ற பயன்தரும் நிகழ்வுகளும் தமிழில் இடம் பெற்றன. பெற்றோர்கள் மிகவும் ஆர்வத்தோடு சிறுவர்களின் பங்களிப்பைப் பார்த்து ரசித்தனர். இதைவிட வாசகர்கள் தங்கள் அபிமான எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் மற்றும் கட்டுரையாளர்களையும் நேரடியாகச் சந்தித்து உரையாடவும், கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் இந்த நிகழ்வு அவர்களுக்கு ஒரு அருமையான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. கௌரவ அரசியல் பிரமுகர்களும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வின்போது, மதிய உணவும், சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன. மாலை 5 மணியளவில் இணையத்தின் செயலாளர் கமலவதனா சுந்தாவின் நன்றி உரையுடன் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.



---

## எங்கள் வீட்டுப் பூனை
### (நிலைமண்டில ஆசிரியப்பா)

கந்தன் வீட்டுக் கடுவன் பூனை
எந்த நாளும் எங்கள் வீட்டிலே!
அழகன் என்பது அதனது பெயராம்
பழகு வதற்குப் பண்பான பிராணியாம்
பந்து உருட்டப் பரம சந்தோசம்
இந்துவின் நாயில் எப்போதும் சந்தேகம்
எலியைப் பிடிப்பதில் எமனைப் போன்றவர்
வலியவே வந்து வாஞ்சையும் காட்டுவார்
சின்ன மகளின் செல்லப் பிள்ளை
என்ன செய்தாலும் எதிர்ப்புக் காட்டார்
கண்ணனின் கண்ணில் காட்ட ஏலாது
கண்ணில் கண்டால் கல்லை எடுப்பான்
எப்படிச் சொல்லியும் ஏறாது இவனுக்கு
அப்படி ஒருவித அடங்காப் பிடாரி
பல்லியைக் கண்டால் பாய்ந்து அடிப்பார்
சொல்லிய சொல்லையும் செவியாற் கேட்பார்
பாலைக் காட்டிட பாய்ந்து வருவார்
வாலைக் குமரிபோல் வளைய நடப்பார்
காலை வேளையில் காப்பி குடிப்பார்
மாலை நேரம் மீனுடன் உண்பார்
பழைய சாப்பாட்டுப் பக்கமும் போகார்
இளையவன் கொடுத்தால் ஏற்றுக் கொள்வார்
மரக்கறி உணவை மணந்தும் பார்க்கார்
கருவாட்டுக் கறியைக் களிப்போடு ஏற்பார்
கள்ள வேலை கனவிலும் செய்யார்
வெள்ளை மனமுள்ள விருந்தினர் ஆவார்
அழையா விருந்தாய் ஆத்துக்கு வந்தவர்
மழலைபோல் எங்களின் மனதைக் கவர்ந்தாரே!

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453

# மனிதனின் சுயநலத்தால் இயற்கை கண்ணீர் விடுகின்றது: மன்னாரில் போதைப்பொருள் மாபியா போல் மணல் அகழ்விற்கு பெரிய மாபியாக்கள் உருவாகிவிட்டன

**கட்டுரையாளர்: வி.எஸ். சிவகரன்**



(26-04-2024)

மனிதன் தனது சுயநலத்தால் நிகழ்கால எதிர்கால சந்ததிகளின் இருப்பு பற்றிய எந்த விதமான தூர நோக்கும் இன்றி சுயநலமாக செயல்படுகிறான்.

இயற்கையோடு இயல்பாக ஒன்றித்து வாழும் வாழ்வியலுக்கு எதிராக இயற்கையை எதிர்த்து தன்னையும் தன் சந்ததியையும் தானே அழிக்கின்றான். என்பதை அறிவு பூர்வமாக உணராமல் அல்லது உணர்ந்தும் தெளியாமல் தன் நலனில் மட்டுமே சிரத்தை கொள்கிறான் என்பதே வேடிக்கையான உண்மை.

இயற்கை தன்னியல்பை எப்போது இழக்கிறதோ அப்போது மனிதன் இயல்பாக உயிர் வாழ முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்பதே இயற்கையின் சமநிலை கட்டமைப்பு.

அதனால் தான் ஒரு நாட்டில் மூன்றில் ஒரு பகுதி காடாக இருக்க வேண்டும் என்பது நியதி. ஒரு மனிதன் சுகதேகியாக சுவாசிக்க 422 மரங்கள் தேவை. கனடாவில் ஒருவருக்கு பத்தாயிரம் மரங்கள் உள்ளன. உலகில் ரஷ்யாவில் தான் அதிக மரங்கள் உள்ளன 642 பில்லியன் அதேபோல் கனடா, பிரேசில், அமெரிக்கா போன்ற நாடுகளில் மக்கள் குடித்தொகை களுக்கு ஏற்ப போதுமான மரங்கள் உள்ளன.

ஒரு வாகனத்தின் நச்சுப் புகையை கட்டுப்படுத்த ஆறு மரங்கள் வேண்டும். நச்சுக் காற்றை மூச்சுக் காற்றாக மாற்றுவது மரங்களே.

ஒரு யானை ஒரு நாளைக்கு முந்நூறு தொடக்கம் ஐநூறு வரை மரங்களை உற்பத்தி செய்கிறது. தனது வாழ்நாளில் 18 லட்சத்து 25 ஆயிரம் மரங்களை உற்பத்தி செய்கிறது.

ஆனால் மனிதன் இவற்றையெல்லாம் வகை தொகையாக அழிக்கின்றான். வட-கிழக்கு உட்பட நாடு முழுவதும் ஆறுகள் அனாதை ஆக்கப்பட்டு விட்டன.

இவற்றில் சட்டரீதியான சட்ட விரோதத்தால் கட்டுப்பாடு இன்றி மணல் அகழ்வு நடைபெற்று வருகிறது. இந்த ஆறுகள் இயல்பாகவே நிலப்பரப்பிலிருந்து ஐந்து தொடக்கம் ஏழு மீட்டர் ஆழமானவை. இருபது தொடக்கம் இருபத்தைந்து மீட்டர் அகலமானவை.

ஆனால் தற்போது பல மடங்கு ஆழ மாகவும் நீளமாகவும் காணப்படுகிறது. ஆற்றங்கரையில் இருபுறமும் உள்ள பல நூற்றாண்டு கடந்த மரங்கள் சாய்ந்து கிடக்கின்றன. அதிக மணல் அகழ்வினால் இயற்கைச் சமநிலை மாறுபடும். மண்ணின் தரம் குன்றும். கடல் நீர் நிலப்பரப்புக்குள் ஊடுருவும். உவர் நீர் உருவாகும். பூமியில் வாழ்கின்ற உயிரினங்களின் பாதுகாப்பு நிலை குலைந்து விடும்.

நீரின் தரம் குன்றி விடும், மரங்கள் பாதிக்கப்படும் போது இயல்பாகவே வறட்சி ஏற்படும். நிலத்தடி நீர் விரைவில் ஆவியாகிவிடும். நன்னீர் மட்டம் கீழ் இறங்கிவிடும். தொற்றா நோய்கள் ஏற்படும்.விவசாயம் முழுமையாக பாதிக்கப்படும். இதனால் உணவு உற்பத்தி நலிவடையும்.

ஆரோக்கியமற்ற பிறப்பு வீதம் ஏற்படும் சமூக பிறழ்வு உருவாகும் இன்னும் பல கேடுகள் மனிதனுக்கு ஏற்படும் ஒரு சதவீத மரங்கள் அழிந்தால் சமூகத்தில் எட்டு விதமான கொசுக்கள் உற்பத்தியாகும் என்கிறார்கள் ஆய்வாளர்கள். உலகில் கொசுக்களால் தான் அதிக மரணம் நிகழ்கிறது.

மண்ணுக்கும் மரத்திற்கும் கேடு விளைவிப்பதால் இயற்கை அனர்த்தம் ஏற்படும். வெப்பமயமாதல் அதிகரிக்கும். தற்போது அதிகூடிய வெப்பநிலை கூட இதற்கு நிகழ்கால உதாரணம் அது மட்டுமன்றி அதிகமான இயல்பற்ற இயற்கை




சீற்றம் ஏற்படும்.

பருவம் கடந்த மாறுதல் உருவாகிறது. காலக்கணிப்பை விஞ்சி விடுகிறது. தற்போது வளைகுடா நாடுகளில் அதிக கூடிய கனமழை பெய்வது காலநிலை மாறுதலே.

இது எல்லாம் இயற்கைக்கு எதிராக மனிதன் ஏற்படுத்தும் வன்கொடுமையின் விளைவுகளே இயற்கை மீதான தாக்குதல்களை மனிதன் நிறுத்துவதாக இல்லை.

(தொடர்ச்சி 21ம் பக்கம்)

PranaScience
NILGIRIS
Yogasalai
Tamil Chair Inc.

Pranayama: Practice and Theory

Join us to understand the science behind Pranayama (yogic breathing) and learn key exercises for daily practice!

Canada Kanthaswamy Temple Society (Scarborough)

733 Birchmount Rd, Scarborough, ON M1K 1R5, Canada





by
Dr. Sundar Balasubramanian
PranaScience, USA

Date & Time
27th April, 2024 (Saturday)
4:00 - 6:00 PM

Open to Ages 12 +
This event and light refreshments are sponsored by:
The Nilgiris Restaurant (Scarborough & Brampton).
The event will be in Tamil / English.

Sponsored by Late Sivasubramaniyam & Sumathi Trust

Donate to Thirumoolar Tamil Chair

உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன்
# வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா
# விஞ்ஞாபனம்-2024

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினாறாவது முறையாக நிகழும் மங்களகரமான குரோதி வருஷம் சித்திரை மாதம் பதினேழாம் நாள் (ஆங்கிலம்29-04-2024) திங்கட்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 09ம் நாள் ஆங்கிலம் 22-05-2024 புதன்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 23-05-2024 வியாழக்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

மஹோற்சவ சிவாச்சாரியார்:
சிவாகம பூஷணம், சிவாகம திலகம்
சிவஸ்ரீ பத்ம ஜெயராம குருக்கள் (இலங்கை)

ஆலய குருமார்:
சிவஸ்ரீ பத்ம ஜெயராம குருக்கள்(இலங்கை)
சிவஸ்ரீ சண்முகம் ஜனார்த்தனன் (பாண்டிச்சேரி, இந்தியா)
சிவஸ்ரீ உமாசுதன் சர்மா (இலங்கை)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

28-04-2024 ஞாயிறு மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 29-04-2024 | திங்கள் | கொடியேற்ற விழா<br>திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 30-04-2024 | செவ்வாய் | திரு. பொன்னம்பலம் சுகுனேந்திரன் குடும்பம் -புங்குடுதீவு | தம்பிஜயா-மனோன்மணி குடும்பம்<br>சிவனேசன் சுசீலா குடும்பம்<br>சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 01-05-2024 | புதன் | திரு. கனகசபை பாலகாந்தன் குடும்பம் கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம் சுளிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 02-05-2024 | வியாழன் | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம் கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம்<br>திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 03-05-2024 | வெள்ளி | திரு. குமாரசாமி பிரபாகரன் நளினி குடும்பம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. கதிர்காமநாதன் குடும்பம்<br>திரு. நாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 04-05-2024 | சனி | செந்தூரன் லாவன்யா குடும்பம் மட்டக்களப்பு | திரு. ராமு சாந்தரூபன் குடும்பம் உரும்பிராய் | கப்பல் திருவிழா |
| 07 | 05-05-2024 | ஞாயிறு | திரு. கஜதீபன் சுஜா குடும்பம் தையிட்டி, காங்கேசன்துறை | ஓர் அன்பர் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 06-05-2024 | திங்கள் | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம் தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம் சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 07-05-2024 | செவ்வாய் | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில் ONGO I LOGISTIC | திரு. ஜெகதேவா சோமாஸ்கந்தன் குடும்பம் - கொக்குவில் | மூக்ஷிக வாகனம் |
| 10 | 08-05-2024 | புதன் | ஓர் அன்பர் | திரு. சந்திரபோஸ் பிருந்தா குடும்பம் Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 09-05-2024 | வியாழன் | திரு. சின்னத்தம்பி குலேந்திரன் குடும்பம் கோப்பாய் | திரு. தியாகராஜா பரமநாதன் குடும்பம் தாவடி | மயில் வாகனம் |
| 12 | 10-05-2024 | வெள்ளி | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம் நுணாவில், சாவகச்சேரி | திரு. சிவலிங்கம் திருக்குமரன், தனுஷன், அனோயன், நிக்ஷன் குடும்பம் - இணுவில் | கற்பகதரு வடிவம் |
| 13 | 11-05-2024 | சனி | திரு சசிலேகா யோகராசா குடும்பம் சுன்னாகம் | திரு. வரன் நாதன் குடும்பம் VIA REALTY INC | குதிரை வாகனம் |
| 14 | 12-05-2024 | ஞாயிறு | திரு. ஆறுமுகம் ஞானச்சந்திரன் குடும்பம் கொடிகாமம் | திரு பசுபதிப்பிள்ளை குமரசற்குணன் குடும்பம் - குறிகட்டுவான் | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 13-05-2024 | திங்கள் | திரு. தவராசா (சுவிசன்)<br>திரு. தவராசா (சுவிகன்) அனலைதீவு | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம் பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 14-05-2024 | செவ்வாய் | ஓர் அன்பர் | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம் புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 15-05-2024 | புதன் | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம் (கனடா) | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம் -மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 16-05-2024 | வியாழன் | திரு. பொன்னையா கனகலிங்கம குடும்பம் அல்வாய் | திரு. ஜெய்கீதா குடும்பம் கேரளா, இந்தியா | நர்த்தன வடிவம் |
| 19 | 17-05-2024 | வெள்ளி | திரு. சந்திரமோகன் சுகிர்தா குடும்பம்-துன்னாலை | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம் Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 18-05-2024 | சனி | திரு. சிவநேசராசா காளிராசா குடும்பம் மீசாலை | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம் அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 19-05-2024 | ஞாயிறு | ஓர் அன்பர் | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன் குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 20-05-2024 | திங்கள் | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 21-05-2024 | செவ்வாய் | ஓர் அன்பர் | திரு சாம் குடும்பம் சிங்கப்பூர் | சப்பறத் திருவிழா |
| 24 | 22-05-2024 | புதன் | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS<br>அழகரெட்ணம் குமார் குடும்பம் கனடா | திரு முத்துக்குமார் தயாவதி குடும்பம் | வைகாசி விசாக முருகன் விழா தேரடி உற்சவம் |
| 25 | 23-05-2024 | வியாழன் | தீர்த்தத் திருவிழா -<br>திரு லக்சன் குடும்பம் (சென்னை) | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம் தொல்புரம் | கொடியிறக்கல் விழா<br>சண்டேஸ்வரா் விழா<br>ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 24-05-2024 | வெள்ளி | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | திரு. சிவகுமார் குடும்பம்<br>திரு. இராஜேஸ்வரன் குடும்பம்<br>A1 Florist - Brampton | காலை: பிராயச்சித்தம்<br>மாலை: வைரவர் மடை |
| 27 | 25-05-2024 | சனி | திரு. திருவருள் கனகசபை குடும்பம் அனலைதீவு | | பூங்காவனம் |

**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி மூன்றாவது தடவையாக ஜுலை மாதம் 25, 26, 27ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 28ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்**

## திருவிழாக்கால நிகழச்சிகள் நேரகால அட்டவணை


**காலை திருவிழா**

6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

**மாலை திருவிழா**

05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - அபிராம சுந்தரம் ராஜேஷ்
முனிராஜ் முனிரெத்தினம் - அண்ணாதுரை மணிகண்டன்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)




ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டா்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

VIVEKA

டுறம் தமிழ் ஒன்றியம் "Evolving Elder Care In-Home Support"வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல் எனும் ,முதியவர்களுக்கான தன்னார்வ அடிப்படையிலான சேவைகளை வழங்குகிறது.

## இலவச சேவை

- உணவு விநியோகம்,
- தன்னார்லர்கள் மூலம் போக்குவரத்து சேவை: மருத்துவமனை நியமனங்கள், மருத்துவரைபார்வையிடல், மளிகைப்பொருள் கொள்வனவு நிலையங்கள் போன்றவை
- முதியோருக்கான சிறு வீட்டு பராமரிப்பு
- நண்பர்களாக வீட்டுக்கு வருகை தருதல் - நட்பு உரையாடல்கள், மற்றும் திறன் வளர்ப்புஉதவிகள். (Zoom, YouTube, google search...)
- போக்குவரத்து சேவை - வழிபாட்டு தலங்கள், Mall, உணவு விடுதிகள் போன்றவை.

## எங்களின் தொடர்புக்கு

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

- (647) 968-9549
- (647) 286-9549

மேலும் தகவலுக்கு எங்கள் இணையதளத்தைப் பார்க்கவும்:

dtaseniorsinhomesupport.ca

# டுறம் தமிழ் ஒன்றியம்

## வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல்



வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

பாதிக்கப்படக் கூடிய மற்றும் குறைந்த வருமானம் உடைய முதியவர்கள்

எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவை வழங்கபபடுகின்றது

PICKERING, AJAX,WHITBY, OSHAWA CLARINGTON, BROCK, UXBRIDGE ,SCUGOG,

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

# வளரும் முதியோர் பராமரிப்பு - வீட்டில் ஆதரவளித்தல்


## இலவச உணவு விநியோக சேவை

அசைவம் அல்லது சைவ விருப்பத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

- சூடான, புதிதாகத் தயாரிக்கப்பட்ட உணவு
- எங்களின் தன்னார்வலர்களால் சரியான நேரத்தில் உணவு விநியோகிக்கப்படுகிறது

எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவைவழங்கப்படுகின்றது

Pickering, Ajax, Whitby, Oshawa, Clarington,Brock, Uxbridge, Scugog





மேலதிக விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

(647) 968-9549

(647) 286-9549

டெலிவரி தேதிக்கு குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னதாக உங்கள் ஆர்டரைச் செய்யுங்கள்.

தகுதி: பாதிக்கப்படக்கூடிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முதியவர்கள்: வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

dtaseniorsinhomesupport.ca

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

# Durham Tamil Association Evolving Elder Care -in Home Support for seniors

## Free Training

- Free Training and a certificate of completion from Computek College in Ajax
- 50 volunteer hours placement

## Benefits

- Free Vulnerable Check
- Unlock valuable life skills with Free Standard CPR and First Aid Training
- Volunteer Travel Expense $0.58/km
- Join us to make a postive impact on seniors lives while gaining valuable skills and exprences.

## Contact US


Office Hours: Monday through Friday 9:00am - 5:00PM

Contact Number:

- (647) 968-9549
- (647) 286-9549

Durham Tamil Association

66 Harwood Ave, S.Ajax L1S 2H6




## Serving Eight Municipalities

- Brock
- Uxbridge
- Scugog
- Pickering
- Oshawa
- Clarington
- Ajax
- Whitby

For More Information Visit the website: dtaseniorsinhomesupport.ca

# Volunteers Needed!

## தன்னலவாளர்கள் தேவை!




Join our volunteer team and gain more than just experience – unlock valuable life skills while making a positive impact on seniors' lives in Durham!

Volunteer Gala : Twice a Year!

- Summer Gala 2024
- Winter Gala 2024
- Spring Gala 2025
- September Gala 2025

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

# 23ம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. தம்பாபிள்ளை நடராஜா

தோற்றம்: 09-04-1927 மறைவு: 05-03-2001
திதி: 23-02-2024

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி. நடராஜா இராசபூபதி

தோற்றம்: 14-12-1937 மறைவு: 23-04-2022
திதி: 30-04-2024

**நினைவெல்லாம் நீங்களே பெற்றோரே**

பத்துமாதம் சுமந்தீர்கள் அம்மா
பத்திரமாக பாரினில் கண்விழித்தோம்
பாலூட்டி பசிபோக்கினீர்கள் அம்மா
பாச உணர்வில் தழைத்தெழுந்தோம்
தாலாட்டிசைத்து தலை கோதினீர்களே அம்மா
தாய்மையின் பொருளறிந்தோம்.
கால் பதிக்க காசினியில் கைகொடுத்தீர்கள் அம்மா
வேறூன்றி நல் விருட்சமானோம்.

இறுதிவரை இணைந்தே நடந்தீர்களே அம்மா
இன்று இல்லாமல்போன மாயமென்ன?
அம்மா நாங்கள் அப்பாவை இழந்து
பரிதவித்து நின்ற போது
உங்கள் தன்நம்பிக்கையும் துணிவும் எமக்கு துணை
நின்ற காரணத்தால் தான்
நாங்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்
சொல்லலொண்ணாத் துயரில் துடிக்கிறோம் அம்மா
துயிலெழுந்து வாரீரோ...

எந்த ஆலயத்திற்குச் சென்றாலும் எமக்காக வணங்கும் தெய்வங்களே உங்களைப்போன்று
எம்மில் அக்கறை கொள்ள இவ்வுலகில் யாரும் இல்லை

காலங்களில் கறைவில் கண்ணீர்த்துளிகள் மறைவதில்லை - உங்கள்
பாதச்சுவடுகளில் வரைவில் - எங்கள் வாழ்க்கைத் தடங்களும் வழிநடக்கும்.

**விழிகள் நீர் சொரிய இதயம் இமயமாய்க் கனக்க, உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கும்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டன்**

**தகவல்:**
**கோகிலராஜா 647-338-6308**
**ஸ்ரீறஞ்சன் 44 7908 758991**
**கிருபாகரன் 33 618 010507**

# ருவாண்டா (1994) ... இலங்கை (2009) ... காசா (2024) ...

## (இனப்படுகொலைகள் தொடர்பில் கனடா உதயனின் சிறப்புத் தொடர்)

(பகுதி - 3)

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)**



உலகத்தையே உலுக்கிய செய்திகள் வெளியாகும் நாளில், ஆர்வமாக அலுவலகம் வரும் செய்தியாளரை, "இன்று உங்களுக்கு வாராந்திர ஓய்வு நாள், நீங்கள் எதற்காக இன்று வந்தீர்கள், வீட்டிற்குச் சென்று ஓய்வெடுங்கள்" என்று ஒரு ஆசிரியர் கூறுவாறாயின் அதைவிட அந்த செய்தியாளரை பாதிக்கும் ஒரு செயல் இருக்க முடியாது.

அது தான் இந்த செய்தியாளருக்கும் நடைபெற்றது. "மணியான" தலைவர் அப்படித்தான் என்னிடம் கூறினார்.

அந்த திங்கட்கிழமை பொழுது சங்கடமாகவே புலர்ந்தது. முதல் நாள் ஞாயிற்றுக்கிழமையும் பிபிசியில் வேலையிருந்தது. அதற்கு முந்தைய நாள் இரவுப்பணி வேறு.

ஆனால், அந்த திங்கட்கிழமை (18.5.2009) அதிகாலை லண்டன் நேரம் சுமார் 5.00 மணி அளவில் நண்பரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அவர்களிடமிருந்து தொலைபேசி அழைப்பு.

"சிவா உங்களுக்கு ஏதாவது செய்தி தெரியுமா? நீங்கள் ஏதாவது கேள்விப்பட்டீர்களா?"

"ஏன் மனோ! ஒன்றும் எனது பார்வைக்கு வரவில்லையே. எதாவது முக்கியமானதா?

"ஒரு செய்தி கேள்விப்பட்டேன். நீங்கள் அனைத்து தரப்புடனும் தொடர்பில் இருக்கக்கூடியவர். போர் தொடர்பான விடயங்களை உங்கள் விரல் நுணியில் வைத்திருப்பவர். இங்கு உள்ளூரில் எமது பார்வைக்கு வராத பல செய்திகள் உங்களுக்கு வந்திருக்குமே" என்றார் மனோ.

"எனது தொடர்புகளிடம் பேசிவிட்டு உங்களை அழைக்கிறேன்".

"நானும் பார்க்கிறேன்"

வெளிப்படையாகவும் நேரடியாகவும் பேசகூடிய ஒரு அரசியல்வாதி மனோ கணேசன். எனது நண்பர் என்பதற்கு அப்பாற்பட்டு நாட்டு நடப்புகளை உண்ணிப்பாக கவனிக்கும் ஒரு அரசியல்வாதி மட்டுமல்ல, சர்வதேச அளவில் மதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும் ஒரு மனித உரிமைகள் போராளியும் கூட. ஐ நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையராக இருந்த கனடாவின் மேரி ராபின்சன் அம்மையாரை இலங்கைக்கு அழைத்துவந்தவர் மனோ கணேசன். அதன் பிறகு ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தின் எந்த ஆணையரும் பதவியில் இருக்கும் போது இலங்கை வந்ததில்லை.

எனது செய்தி மூலங்கள் மற்றும் தொடர்புகளுடன் தொடர்ச்சியாக அடுத்த 30 நிமிடங்களுக்கு அழைப்புகளை எடுத்து பேசியபோதும் தகவல்கள் ஏதும் தெரியவரவில்லை. எமது வட இலங்கைச் செய்தியாளர் மாணிக்கவாசகம் மற்றும் கிழக்கிலங்கைச் செய்தியாளர் உதயகுமார் ஆகியோருடனும் பேசிவிட்டு ஏதேனும் "முக்கியமானதாக" இருந்தால் என்னை அழைக்கவும் என்று கூறிவிட்டு அலுவலகம் புறப்பட தயாரானேன்.

காலை சுமார் 6 மணி அளவில் ஒரு செய்தி வந்தது. "முக்கியமான தகவல் இன்னும் ஓரிரு மணி நேரத்தில் தெரியவரலாம். எனினும் எதையும் இத்தருணத்தில் உறுதி செய்ய இயலாது. எனவே கண்களையும் காதுகளையும் திறந்து வைத்திருங்கள்" என்று மிகவும் நம்பத்தகுந்த ஒரு செய்திமூலம் ஒன்றிலிருந்து எனக்கு வந்தது.

இந்த தகவலை நான் மனோவை அழைத்து கூற அவரும் "நானும் கேள்விப்பட்டேன். தி வார் சீம்ஸ் டு பி ஓவர் சிவா" என்றார்.

இதற்குள் 7 மணி ஆகிவிட, வீட்டில் இருப்புக்கொள்ளாமல், அன்று ஓய்வு நாளாக இருந்தாலும் அலுவலகம் புறப்பட்டுச் சென்றேன். நான் அலுவலகத்தை அடைந்த சமயத்தில் பிபிசியின் தமிழோசை மற்றும் சிங்கள சேவையான சந்தேஷ்யவில் யாரும் வந்திருக்கவில்லை.

உடனடியாக மாணிக்கவாசகம் அவர்களை அழைத்தேன். அப்போது இலங்கையில் மதியம் சுமார் 12.30 மணி இருக்கும். லண்டனில் காலை 8.00 மணி.

இதற்குள் தமிழோசையின் இதர "மூத்த" செய்தியாளர்களும் வந்து சேர்ந்தனர். இங்கு அனைத்தும் நானே என்ற எண்ணம் கொண்டிருந்த "மணியான" தலைவருக்கு அன்றைக்கு செய்தி ரீதியாக இருந்த பரபரப்பைவிட வார ஓய்வு நாளன்று நான் ஏன் அலுவலகம் வந்தேன் என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது.

"உங்களுக்கு இன்று ஓ·.ப் டே ஆச்சே"

"ஆமாம், முக்கியமான செய்தி ஒன்று இருக்ககூடும் என்று அறிந்தேன், அதனால் விரைவாக புறப்பட்டு வந்தேன்".

"எதுவாக இருந்தாலும் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். நீங்கள் வீட்டிற்கு சென்று ஓய்வெடுங்கள்".

"ஓய்வு முக்கியமில்லை. மிகவும் முக்கியமான ஒரு நாளில் செய்தி சேகரிப்பில் ஈடுபடாமல் இருப்பது எனக்கு உடன்பாடு இல்லை" "இல்லை". நீங்கள் இன்று வேலை செய்தால் உங்களுக்கு மற்றொரு நாள் விடுப்பு அளிக்க வேண்டும். அது சரிப்பட்டு வராது. நீங்கள் வீடு சென்று ஓய்வெடுங்கள்".

"செய்தியைவிட உங்களுடைய கவலை அதுவானால், எனக்கு இன்று வேலை செய்ததற்கு ஈடாக மற்றொரு நாள் விடுப்பு தேவையில்லை. உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணை இருந்தால், நான் மத்திய செய்தியறைக்கு சென்று அவர்களுடன் இன்று பணியாற்றுகிறேன்" என்று சொல்ல, எனக்கு ஆதரவாக குரல்கள் எழுந்தன.



வேறு வழியின்றி, "சரி சிவா, நீங்கள் இன்று பணியில் இருப்பதாகவே குறித்துக்கொள்கிறேன்" என்று கூற ஒரு வழியாக அந்த பஞ்சாயத்து முடிவிற்கு வந்தது.

அப்போது கூட அந்த "மணியான" தலைவருக்கு அன்று என்ன அப்படி முக்கியமான செய்தி என்பதைவிட நான் ஓய்வு நாளன்று வேலைக்கு வந்ததே மண்டையை குடைந்துகொண்டிருந்தது.

அதற்குள் அரசல் புரசலாக செய்தி கசிய ஆரம்பித்தது. "போர் முடிந்துவிட்டது, பிரபாகரன் இறந்துவிட்டார்".

உடனடியாக உலகெங்கிலிருந்தும் தொலைபேசி அழைப்புகள். பிபிசியின் மத்திய செய்தியறையிலிருந்து இடைவிடா அழைப்புகள். அந்த செய்தியை உறுதி செய்ய உள்ளக செய்தியறை முதல் உலகமெங்கும் பிபிசி தமிழோசையை எதிர்ப்பார்த்து காத்திருந்தது.

அதிகாரபூர்வ அறிவிப்பு வரும்வரையில் நாம் ஏதும் செய்தியை வெளியிட வேண்டாம் என்றது தலைமை. இதற்குள் மாணிக்கவாசகமும், உதயகுமாரும் - ரூபவாஹினி மற்றும் அரச வானொலியில் போர் முடிந்துவிட்டதாகவும், பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டதாகவும் செய்திகளை வெளியிட்டு வருகின்றன - என்று கூறினார்கள். மாணிக்கவாசகமும் வன்னியிலுள்ள தனது தொடர்புகளும் அது உண்மை என்பதை உறுதிப்படுத்துவதாகக் கூறினார். இதற்குள் மத்திய செய்தியறையும் மாணிக்கவாசகத்தை தொடர்புகொண்டு இதே தகவலைப் பெற்றிருந்தனர்.

ஆனல், அந்த சமயத்தில் "பிரபாகரன் இறந்துவிட்டார்" என்ற செய்தியதான் வெளியாதே தவிர அவர் உடல் குறித்து எந்த தகவலும் இல்லை.

"போர் முடிந்துவிட்டது, பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார்" என்று கூறப்படுவதை தலைப்புச் செய்தியாக வெளியிடலாமா என்று தமிழோசையின் "தலைவரிடம்" கேட்க அவரோ, அவசரப்பட வேண்டாம். செய்தி உறுதியானதும் போடலாம் என்று கூறி இழுத்தடிப்புச் செய்தார். அரசு தரப்பில் கூறப்படுவதையே செய்தியாக்க வேண்டும் என்பது அவரது நிலைப்பாடாக இருந்தது. ஆனால் எங்களைப் போன்ற சிலரோ, "போர் முடிந்துவிட்டது" என்று கூறப்படுவது தமிழர் தரப்பிலிருந்து பார்க்கப்படும் செய்தியாக இருக்க வேண்டும் என்று வாதிட்டோம். அதை அவர் புரிந்துகொண்டதாகவோ அல்லது ஏற்றுக்கொள்வதாகவோ தெரியவில்லை.

அவருக்கு உள்ளூர "பிரபாகரன் கொல்லப் பட்டுவிட்டார்" என்பதில் ஒரு நிம்மதி இருந்ததை உணர முடிந்தது. ஆனால், எப்படி செய்தியை முன்னெடுத்துச் செல்வது என்பதில் அவருக்கு தெளிவில்லாத சூழல் நிலவியது. இதற்குள் லண்டன் நேரம் காலை 10 மணியாகிவிட்டது.

இதனிடையே நமது செய்தியாளர்களும் ரூபவாஹினி தொலைக்காட்சியில் தொடர்ச்சியாக போர் முடிந்துவிட்டது என்று அறிவிக்கிறார்கள் என்று கூற, மத்திய செய்தியறையும் எங்கள் தரப்பிலிருந்து அது உறுதிசெய்யப்படுவதற்காக காத்திருந்தது. எனினும், தமிழோசயின் தலைவரோ மஹிந்த ராஜபக்சவே தனது தொலைபேசியில் அழைப்பெடுத்து போர் முடிந்துவிட்டது, பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என்று கூற வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

இந்த சூழலை மத்திய செய்தியறையின் தலைமை ஆசிரியருக்கு விளங்கச்செய்து, இனியும் நாம் தாமதிக்கலாகாது, அரச ஊடகம் கூறுவதை மேற்கோள் காட்டி நாமும் செய்தியை வெளியிடுவோம் என்ற கருத்தை முன்வைத்தேன். அதை அவர் ஏற்றுக்கொண்டு சுமார் 10:10 மணியளவில் அந்த செய்தியை ஒரு செய்தியறிக்கையாக வெளியானது. உடனடியாக அனைத்து மொழி சேவைகளும் இதையே பிரதான செய்தியாக தமது வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையத்தில் வெளியிட்டன.

உலகமே இந்த விஷயத்தில் பிபிசி தமிழோசையை எதிர்ப்பார்த்து காத்திருந்த போது, உலகத் தமிழர்களுக்காக அதிலும் குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக ஒலித்திருக்க வேண்டிய தமிழோசை, மத்திய செய்தியறையின் ஆங்கில செய்திக்குறிப்பை மொழிபெயர்த்து வெளியிடும் அவல நிலையில் இருந்தது என்பது மறுக்க முடியாத கசப்பான உண்மை.

இந்த சமயத்தில் பிபிசி நிறுவனம் எப்படிச் செயல்படும் என்பதை சுருக்கமாக உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். உலக அளவில் அந்த நிறுவனத்திற்கு பெருமையும் நம்பகத் தன்மையும் பெற்றுத்தந்தது அதன் உலகசேவை வானொலி ஒலிபரப்புகள் தான். சுமார் 30 மொழிகளில் ஒலிபரப்பான அந்த சேவைக்கு உலகம் முழுவதிலிருந்தும் முழுநேர மற்றும் பகுதிநேர செய்தியாளர்கள் இருந்தனர். களத்திலிருந்து அவர்கள் தரும் செய்தியே பிபிசியின் அடிப்படையாக இருந்தது. அது மட்டுமல்ல, ஒவ்வொரு மொழிப்பிரிவின் தலைவர்களுக்கும் "வானளாவிய அதிகாரம்" இருந்தது. பிரித்தானிய மகாராணியைவிட இவர்களுக்கு கூடுதல் அதிகாரம் இருந்தது என்று கூறப்படும். ஆகவே ஒவ்வொரு மொழிப்பிரிவின் தலைவர்களும் ஒரு குறுநில மன்னர்களைப் போன்று நடந்துகொள்வார்கள்.



தொடர்ச்சி 21 பக்கம்)


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# "மலையக தமிழ் இலக்கியம்" மலையகா சிறப்பிதழும்

**- சிறப்புரை வி.தேவராஜ் -**



சி.வி. வேலுப்பிள்ளையின் ஆங்கிலக் கவிதைகளை தமிழ் மொழியில் தந்தவர் சக்தி பாலையா.

"புழுதிப் படுக்கையில்
புதைந்த என் மக்களைப்
போற்றும் இரங்கற்
புகழ் மொழி இல்லை

பழுதிலா அவர்க் கோர்
கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவுநாள்
பகருவார் இல்லை.

ஊனையும் உடலையும்
ஊட்டி இம் மண்ணை
உயிர்த்த வர்க்(கு) இங்கே
உளங்கசிந் தன்பும்

பூணுவாரில்லை - அவர்
புதைமேட்டிலோர் - கானகப்
பூவைப் பறித்துப்
போடுவாரில்லையே."

• இரண்டாவது கவிதை

"ஆழப் புதைந்த
தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த
அப்பனின் சிதைமேல்

ஏழை மகனும்
ஏறி மிதித்து
இங்கெவர் வாழவோ
தன்னுயிர் தருவன்.

என்னே மனிதர்
இவரே இறந்தார்க்கு
இங்கோர் கல்லறை
எடுத்திலர்! வெட்கம்

தன்னை மறைக்கத்
தானோ அவ்விறைவனும்
தளிர் பசும் புல்லால்
தரை மறைத்தனனோ!"

• மலையகம் சம்பந்தப்பட்ட மக்கள் இலக்கியம் இவ்விலக்கியத்தின் அடியாக தோன்ற வேண்டியவையே. சி.வி. வேலுப்பிள்ளை என்.எஸ்.எம். இராமையா முதலானோரின் படைப்புகள் நாட்டார் இலக்கியத்தின் மறு பதிவுகளாக காணப்படுகின்றன எனக் கூறலாம்.

மலையக நாட்டார் பாடல்களை நுண்ணியத்துடன் நோக்குகின்ற போது மலையக வாழ்வியலை அடியாகக் கொண்டு தோற்றம் பெற்ற முதல் இலக்கிய படைப்புகளாக இவை அமைந்து காணப்படுகின்றன என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

• அதே வேளையில் வாய் மொழிப் பாடல்களில் ஏராளமான வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கிய பாடல்களை மலையகத்திலேயே காண முடிகின்றதென்பதை சி.வி.வேலுப்பிள்ளை ஏ.வி.பி.கோமஸ் சாரல்நாடன் ஆகியோரால் எழுதப்பட்டுள்ள மலைநாட்டு மக்கள் பாடல்கள் (1983) அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான் (1988) மலையக வாய் மொழி இலக்கியம் (1993) என்ற நூல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

• "ஆரம்ப கால மலையக எழுத்து இலக்கியம்" மலையக மக்கள் மத்தியில் இருந்து எழவில்லை.

பெருந்தோட்ட பயிர்ச் செய்கையுடன் அழைத்து வரப்பட்ட பயிர்ச் செய்கையாளர்களே இலங்கையில் ஒரு புதிய இலக்கிய தோற்றத்திற்குக் காரணமாயினர்.

பயிர்ச்செய்கையை அறிமுகம் செய்த ஆங்கிலேயர்களில் பெரும்பாலானவர்களுக்கு முறையான படிப்பில்லை. ஒரு சிலர் தங்களது படிப்பறிவினால் இலங்கை மலைப் பிரதேசங்களில் ஏற்பட்டு வரும் புதிய மாற்றங்களையும் உள்ளூர் வாசிகளிடம் அதனால் ஏற்பட்டு வரும் மாற்றங்களையும் மனோபாவத்தையும் எழுத்தில் வடித்துள்ளனர். இவ்வாறு கட்டுரை வடிவத்தில் அமைந்த பல நூல்களும் அடங்குகின்றன.

• வில்லியம் நைட்டோன் "கானக வாழ்வு" என்ற பெயரில் இரண்டு பாகங்களில் ஒரு நாவலை முறையே 1854 - 1868 என்ற கால வரிசையில் வெளியிட்டுள்ளார்..

அதே வேளையில் தேட்டப் பயிர்ச் செய்கையாளர்கள் தமது அனுபவங்களைத் தமது மொழியில் பிரித்தானியருக்கு கொடுத்துக் கொண்டிருந்தனர் என்கிறார் யஸ்மின்.

இதே நிலப்பரப்பில் பல்லாயிரக்கணக்கில் குடியேறிய இதுவரை காலம் தாம் அறிந்திராத அநுபவங்களைத் தரிசித்த தமிழ் மொழி பேசிய கூட்டத்தினரின் சுவடுகள் ஆங்காங்கே இந்த ஆங்கிலப் படைப்புக்களில் காணக் கிடைக்கின்றதே தவிரத் தமிழ் மொழியில் எழுத்திலக்கியமாக இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை எதையும் கூறுவதற்கில்லை.

## பிரசார எழுத்து

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் மலையக மக்களை தொடர்ந்தும் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுத்த வேண்டியிருந்ததினால் பிரசார நோக்கில் கோப்பிக் கிருசிக் கும்மி என்றும் தேயிலைக் கிருசி கும்மி என்றும் பிரசுரங்கள் வெளியாகின.

"சுத்தமான சிலோன் தேயிலையைக் குடியுங்கள்" என்று பல்லாயிரக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இவை பணம் கொடுத்து எழுதப்பட்ட பிரசார பிரசுரங்களாகும். இந்தப் பிரசுரங்கள் தமிழ்த் தொழிலாளர்களைக் கவர்வதற்காக தோட்டத்துறை சார்ந்த நிர்வாக தமிழ் உத்தியோகத்தர்களால் எழுதப்பட்டவையாகும்.

1869 ஆம் ஆண்டு ஏ.ஜோசப் என்ற தோட்டக் கண்டக்டர் ஒருவரால் எழுதப்பட்ட கிருசிக்கும்மி யாழ்ப்பாணத்தில் பதிப்பிக்கப்பட்டு மலையக மக்களிடையே இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

## 1920 இல் மாற்றம்

இந்த மக்களின் கிணற்றில் விழுந்த கல்லாகக் கிடந்த வாழ்க்கையில் சலனம் ஏற்படத் தொடங்கியது 1920 களுக்குப் பிறகுதான். 1823 ஆம் ஆண்டில் இருந்து மாற்றத்தை 97 வருடங்களுக்குப் பிறகே காணக் கூடியதாக இருந்தது. அந்தளவுக்கு இந்த மக்கள் இறுக்கமான காலனித்துவ கட்டமைப்புக்களால் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக வைக்கப்பட்டிருந்தனர். தோட்டங்களில் வெளியார் எவரும் நுழைய முடியாத வகையிலும் கிராம மக்களுடன் தொடர்புகள் அற்ற மக்களாக வைக்கப்பட்டிருந்தனர்.

கோ. நடேச ஐயர் தோட்டங்களுக்குள் நுழைய முடியாத நிலையிலும் புடவை வியாபாரியாகத்தான் தோட்டங்கில் நுழைந்து மக்களைச் சந்தித்தார்.

அதுமாத்திரமல்ல நடேச ஐயர் தொழிற்சங்க அரசியல்வாதியாக மாறி ஆரம்பகாலத்தில் கொழும்பில் இருந்தே மலையகத்திற்குச் சென்று வந்தார். ஹட்டனில் தொழிலாளர்கள் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி அன்றைய தினமே கொழும்பு திரும்புவது வழக்கம். காலப் போக்கில் நீதிபதி நடேச ஐயர் ஆஜராகின்ற வழக்ககளை இரண்டு மணிக்குப் பிறகே விசாரணைக்கு எடுப்பார். கொழும்புக்கான கடைசி புகையிரதம் 1.30க்கு அட்டனில் இருந்து புறப்பட்டுவிடும். எனவே அவர் கொழும்புக்கு வர முடியாது. தோட்டத் தொழிலாளர்கள் குடியிருக்கும் லயத்துக் காம்பிராவிலேயே தங்கிவிடுவார். இதன் காரணமாக நடேச ஐயர் மலையகத்திலேயே தனது மனைவியுடன் தங்கி தனது பணியினை மேற் கொண்டார்.

• இந்தக் காலப் பகுதியில் 1920க்குப் பிறகு 20க்கு மேற்பட்ட பத்திரிகைகள் தோற்றம் பெற்றன. இந்தப் பத்திரிகைகள் அனைத்தும் மலையக மக்களை தட்டி எழுப்புவதாகவே செயற்பட்டன.

தேசபக்தன் கோ. நடேச ஐயர் அவர்களின் இலங்கை இந்தியன் - சத்யமித்ரன் போன்ற பத்திரிகைகளின் பணி 1920 ஆம் ஆண்டிலிருந்து 1930ஆம் ஆண்டு வரையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

## (சென்ற வார தொடர்ச்சி...)

கோ. நடேச ஐயர் அவர்கள் மலையக மக்களிடையே தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு இலக்கியத்தை ஒரு சாதனமாக பயன்படுத்தினார்.

1924 இல் நடேசஐயர் தேசபக்தன் என்ற இதழைத் தொடங்கினார். அரசியலில் செல்வாக்குடன் அவர் இருந்த போதும் தேசபக்தனில் எழுதுவதை அவர் நிறுத்தவில்லை.

நடேச ஐயரின் இப்பெரும் பணியில் தோள் கொடுத்தவர் அவரின் மனைவி மீனாட்சி அம்மையார்.

தொழிலாளர்களுக்காக இருவரும் இணைந்து பாடிய "சட்டக் கும்மி" பாடல்கள் தொழிலாளர்களைத் தட்டி எழுப்பியது.

## புதிய மலையக ஆத்திசூடி

தேசபக்தன் இதழின் முகப்பில் புதிய மலையக ஆத்திசூடிப் பாடல்களை பதிப்பித்த கோ. நடேச ஐயர் அதனை இலங்கை முழுவதும் பரவச் செய்தார்.

அவர் எழுதிய நூல்கள் சில.

நீ மயங்குவதேன்? - கோ. நடேசய்யர் - 1931 -

4. இந்தியத் தொழிலாளர் துயரச் சிந்து - மீனாட்சி அம்மை. - 1931 - சகோதரி அச்சகம்
5. இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகம் - கோ.நடேச ஐயர் திருமதி. கோ.ந. மீனாட்சியம்மாள். 1937 - கமலா பிரஸ்.
7. இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை. மீனாட்சி அம்மையார். 1940 - கணேஸ் பிரஸ் அதற்குப் பிறகு வீரகேசரி (1930) தினகரன் (1932) என்ற பத்திரிகைகளில் இந்தப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன.

• 1960 களில் மலையகத் தமிழ் இலக்கியம் புத்தெழுச்சி காணும் வரையில் அதாவது 1920 இல் இருந்து 1960 வரை மக்கள் மனம் தளர்ந்து போகாது அவர்களுக்கு உணர்வு ஊட்டி காத்தவர்கள் சிறு பிரசுரங்களும் அவற்றைப் பாடிக் காட்டிய பாடலாசிரியர்களுமாகும்.

• எஸ்.ஆர்.எஸ் பெரியாம்பிள்ளை பி.ஆர் பெரியசாமி மா.செ. ஜம்புலிங்கம் போன்றோரது பணி மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

மலையக இலக்கிய பாரம்பரியத்தின் செல்வாக்கு மிகுந்த நாட்டுப்பாடலின் தாக்கத்திற்கு இவர்கள் ஆட்பட்டிருந்தனர். பொது மக்களை இவை பெரிதும் கவர்வதன.

## மலையக இலக்கியத்தில் புதிய இரத்தம்.

இதே கால கட்டத்தில் இலங்கை இலக்கிய உலகில் நவீன இலக்கியப் பரிச்சயங்களுடன் இனம் காட்டுவதில் சிவி. வேலுப்பிள்ளை சக்தீ அ. பாலையா கே. கணேஸ் ஆகியோர் முனைப்போடு செயற்பட்டனர்.

ஆங்கில புலமை பெற்ற இவர்கள் தமிழ் மொழியில் மாத்திரமன்றி ஆங்கிலப் பத்திரிகைகளிலும் எழுதினர்.

• எட்டியாந்தோட்டை சென் மேரிஸ் கல்லூரி தமிழ் விழாவில் கலந்து கொண்டு பேசிய மட்டக்களப்பு எஸ்.பொன்னுத்துரை.

"1948 ஆம் ஆண்டும் 1956ஆம் ஆண்டும் கொண்டுவரப்பட்ட குடியுரிமைச் சட்டமும் சிங்கள மொழிச் சட்டமும் தான் மலையக இலக்கியத்தை தேசிய இலக்கியமாக உருவாக்க உதவின" என்று குறிப்பிட்டார்.


## 1960 மலையக இலக்கியத்தின் எழுச்சிக் காலம்

• மலையக இலக்கியத்தில் 1960 ஆம் ஆண்டு காலப்பகுதி குறித்து வெகுவாகப் பேசப்படுவதை காணலாம்.

## ஈவேரா மற்றும் திராவிடச் செல்வாக்கு

• ஏனெனில் இந்தக் கால கட்டம் ஈவேரா மற்றும் திராவிடச் செல்வாக்கு மலையகத்தில் வியாபித்திருந்த காலம். அதே வேளையில் இடதுசாரிக் கருத்துக்களால் உள்வாங்கப்பட்டு இடதுசாரி தொழிங்சங்கங்களும் வீரியம் பெற்றிருந்த காலம். மறு வலமாக காந்தி மன்றம் அண்ணா மன்றம் நேரு மன்றம் எம்ஜியார் மன்றம் சிவாஜி மன்றம் என்பன கலை பண்பாட்டு அம்சங்களும் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு மோகமும் மேலோங்கி இருந்தது.

(தொடர்ச்சி 18 பக்கம்)



# "மலையக தமிழ் இலக்கியம்" மலையகா சிறப்பிதழும்

## - சிறப்புரை வி.தேவராஜ் -

*(17 பக்கத் தொடர்ச்சி)*

• வீரகேசரி தினகரன் ஈழநாடு பத்திரிகைகளுடன் தமிழகத்திலிருந்து தினத்தந்தி தினமணி திராவிடக் கழக ஏடுகளான முத்தாரம் முரசோலி தென்றல் மாலைமணி கல்கி குமுதம் கல்கண்டு ஆனந்தவிகடன் போன்ற பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் பணம் கொடுத்து வாங்கிப் படித்தனர்.

### தமிழக செல்வாக்கை தடுத்து நிறுத்தும் இலங்கை அரசு.

• இந்த தமிழக செல்வாக்கை தடுத்து நிறுத்த வேண்டிய தேவை இலங்கை அரசுக்கும் ஆட்சியாளர்களுக்கும் இருந்தது. எனவே இலங்கை அரசு குறிப்பாக சிறிமாவோ பண்டாரநாயக்க இந்தியாவில் இருந்து பத்திரிகைகள் புத்தகங்கள் மற்றும் பிரசுரங்களைத் தடை செய்தது. உள்ளுர் இலக்கியங்களை மேம்படுத்துவதற்காகவும் பிரசுரங்களை ஊக்குவிப்பதற்காகவே இந்திய குறிப்பாக தமிழக பத்திரிகைகளுக்கும் பிரசுரங்களுக்கும் தடை விதிப்பதாக அப்போது கூறப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் இந்தசெயற்பாடு வரவேற்கத்தக்கதாக இருந்தபோதும் மலையகத்தின் மீது தீவிரமாகப் பரவிய திராவிடச் செல்வாக்கை வேரறுப்பதற்கே இலங்கை அரசினால் இந்தத் தடை கொண்டு வரப்பட்டது.

இதனால் நன்மை விளைந்தது என்பது மறுப்பதற்கில்லை. வீரகேசரி மனேஜராக இருந்த பாலச்சந்திரன் தமிழ் எழுத்தாளர்களைத் தேடிப்பிடித்து கதைகளையூம் நாவல்களையூம் பெற்று வீரகேசரிப் பிரசுரங்களாக வெளியிட்டார்.

வடக்கு கிழக்கு மலையகம் எனப்பல எழுத்தாளர்களின் இலக்கியங்கள் சிறுகதைகளாகவும் நாவல்களாகவும் அச்சேறி மக்களின் கைகளுக்கு வந்தன. இதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வீரகேசரி நிறுவனத்தின் விநியோக கட்டமைப்பு பெரிதும் உதவின.

### வீரகேசரிப் பிரசுரங்கள் பற்றி பேராசிரியர் நா. சுப்ரமணிய ஐயர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

நாற்பத்தைந்து நாவல்கள் வீரகேசரி பிரசுரங்களாகவும் பதின்மூன்று நாவல்கள் வீரகேசரியின் துணை வெளியீட்டு நிறுவனமான ஜனமித்திரன் பிரசுரங்களாகவும் அமைகின்றன என்ற உண்மை அண்மைக்காலத்தில் நாவல் வெளியீட்டுத்துறையிலே வீரகேசரி நிறுவனம் வகிக்கும் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக அமைகின்றது. இந்த எண்ணிக்கை அண்மைக்காலம் வரைப் பார்க்கும் போது எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### மு. நித்தியானந்தனின் வைகறை வெளியீடு.

மலையகத் தொகுப்பு என்ற ரீதியில் 1971 இல் எஸ்.எம். கார்மேகம் கோவிந்தராஜ் எச்.எச். விக்ரமசிங்க ஆகியோரின் முயற்சியில் வெளியான மலையகத்தின் முதல் சிறுகதைத் தொகுப்பான "கதைக்கனிகள்" நூலினை வீரகேசரியின் முதல் பிரசுரமாக நாம் கொள்ளலாம் என மு. நித்தியானந்தன் குறிப்பிடுகின்றார்.

எனினும் முதல் மலையகச் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்ட பெருமை அவர் ஆரம்பித்த வைகறை பிரசுரத்திற்கே உரியதாகும்.

மலையக எழுத்தாளர்களின் சிறு கதைகளின் தொகுப்பாக தெளிவத்தை ஜோசப்பின் "நாமிருக்கும் நாடே" என்.எஸ்.எம். இராமையாவின் "ஒரு கூடைக் கொழுந்து" சி.வி. வேலுப்பிள்ளையின் "வீடற்றவன்" என்பன வைகறைப் பிரசுரங்களாக வெளிவந்தன. இதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவர் மு.நித்தியானந்தன்.

இந்தத் தொகுதிகள் வெளி வர நித்தி சேருடன் அவ்வேளையில் யாழ் பல்கலைக் கழகத்தில் மாணவர்களாக இருந்த பாலசுப்ரமணியம் தேவராஜ் மூக்கையா நடராஜா ஜெயராமன் ஆகியோர் பக்க பலமாக இருந்து பணியாற்றியதை இவ்விடத்தில் நினைவு கூர விரும்புகின்றேன்.

### நண்பர் முருகபூபதி இவ்வாறு எழுதுகின்றார்.

"மு. நித்தியானந்தன் இல்லையென்றால் இராமையாவின் ஒரு கூடைக் கொழுந்து (1980 இல் தேசிய சாகித்திய விருது பெற்றது) சிறுகதைத் தொகுப்பை தமிழ் இலக்கிய உலகம் கண்டிருக்காது. நித்தி - தெளிவத்தை ஜோசப்பின் நாமிருக்கும் நாடே - சி..வி. வேலுப்பிள்ளையின் வீடற்றவன் முதலானவற்றையும் தனது வைகறை வெளியீடாகக் கொணர்ந்தார்.

என்.எஸ்.எம் மாத்திரம் அல்ல - அவரைப் போன்ற பல அற்புதமான மலையக இலக்கிய கர்த்தாக்கள் மலையக அரசியல் இயக்கங்களினால் அவற்றின் தலைவர்களினால் கண்டு கொள்ளப்படவில்லை. அவர்கள் கண்டுகொள்ள முயலவுமில்லை" என்று நண்பர் முருகபூபதி இராமையா மறைந்தபோது எழுதிய இரங்கலுரையில் குறிப்பிட்டுள்ளார்.

### லண்டனில் நூல் வெளியீடு.

மு. நித்தியானந்தன் அவர்களின் முயற்சியால் வெளிக் கொண்டு வரப்பட்ட மூன்று நூல்கள் எதிர்வரும் (ஏப்ரல்) 20 ஆம் 21 அம் திகதிகளில் லண்டனில் வெளியிடப்பட உள்ளன.

சி.வி. வேலப்பிள்ளையின் "எல்லைப்புறம்" என்ற நாவல் தெளிவத்தை ஜோசப் எழுதிய கதைகளின் தொகுப்பாக "தெளிவத்தை ஜேசப்பின் கதைகள்" என்ற தொகுப்பு நூல் மு. சிவலிங்கத்தின் கதைகள் அடங்கிய "ஒப்பாரிக் கோச்சி" என்ற மூன்று நூல்களே அவைகளாகும்.

சி.வி வேலப்பிள்ளையின் "எல்லைப்புறம" என்ற நாவல் 1958 இல் எழுதப்பட்டது. இந்த நாவலை அவர் எழுத மூன்று வருடங்கள் பிடித்துள்ளன. BORDER LAND - எல்லைப்புறம். தோட்டப்புற மக்களுக்கும் கிராம மக்களுக்கும் இடையிலான பிரச்சனையை மையமாக வைத்து எழுதப்பட்ட நாவலாகும். இது ஏற்கனவே கனடா "தாய் வீடு" வெளியீடாக வெளி வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந் நூலுக்கான வெளியீட்டு விழாவினை மல்லியப்பு சந்தி திலகர் கொழும்பில் நடத்தியுள்ளாா.

"தெளிவத்தை ஜேசப்பின் கதைகள்" என்ற தொகுப்பு நூல் தெளிவத்தை ஜோசப் எழுதிய பெரும்பாலான கதைகளை உள்ளடக்கியதாகும். இந்த நூலில் 59 சிறு கதைகள் இடம்பெற்றுள்ளன. 450 பக்கங்களுடன் இந் நூல் வெளியாகியுள்ளது.

தெளிவத்தை ஜோசப் உயிருடன் இருக்கும் பொழுதே இந்த நூலினை வெளிக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மு. நித்தியானந்தன் மீனா நித்தியானந்தன் மற்றும் விக்ரமசிங்க ஆகியோர் முயற்சித்த போதும் நூல் வெளி வருவதற்குள்ளேயே தெளிவத்தை ஜோசப் அவர்களை காலன் கவர்ந்து விட்டான்.

"ஒப்பாரிக் கோச்சி" என்ற நூல் மு.சிவலிங்கம் எழுதிய சிறு கதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளது. இந் நூலில் அவர் எழுதிய 16 சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன.

வைகறை பிரசுரத்திற்கப் பிறகு பல பிரசுரங்கள் மலையக இலக்கியத்தை வளர்த்தெடுத்தன. துரை விஸ்வநாதன் போன்ற பலர் தமது சொந்த பணத்தை முதலிட்டு மலையக எழுத்தாளர்களின் ஆக்கங்களை பிரசுரித்தனர்.

### பேராசிரியர் கைலாசபதி

பேராசிரியர் கா. கைலாசபதி அவர்கள் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த போது மலையக எழுத்தாளர்களை ஊக்குவித்து எழுத வைத்துள்ளார். சி.வி. வேலுப்பிள்ளையின் படைப்புக்கள் பல தினகரனில் பிரசுரமாகின. சி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் ஆங்கிலக் கவிதைகளை பொன். கிருஸ்ணசாமி மொழி பெயர்த்து தொடராக தினகரனில் வெளியிட்டார்.

அது மாத்திரமல்ல நாடகத்துறையில் அதிக ஆர்வம் காட்டிய என.எஸ்.எம். இராமையாவின் நாடகத்தைப் பார்வையிட்ட பின் அவரைச் சந்தித்த கா.கைலாசபதி அவர்கள் சிறுகதைகள் எழுதுவதில் ஆர்வம் காட்டுமாறு கேட்டுக்கொண்டார்.

அதனையடுத்தே இராமையா அவர்கள் சிறுகதைகளை எழுதுவதில் கூடுதல் கவனம் செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே போன்று சி.வி. வேலுப்பிள்ளை அவர்களை நாவல் எழுதுமாறு கா. கைலாசபதி அவர்கள் ஆலோசனை வழங்கினார். அதனை அடுத்தே சி.வி. வேலுப்பிள்ளை நாவலை எழுதத் தொடங்கினார். அந்த நாவல்தான் மூன்று வருட உழைப்பில் பிறந்த "எல்லைப்புறம" நாவலாகும்.

### மலையக இலக்கிய கர்த்தாக்கள்.

நடேசஐயர் பத்திரிகையாளர் அரசியல்வாதி தொழிங்சங்கவாதி. குறிஞ்சித் தென்னவன் ஒரு தொழிலாளி. சாரல்நாடன் ஒரு தேயிலைத் தொழிற்சாலை அதிகாரி. தெளிவத்தை ஜேசப் ஒரு தோட்டப்பாடசாலை ஆசிரியர். பின்னாளில் Star toffee நிறுவனத்தில் அக்கவூண்டனாக பணிபுரிந்தார். சி.வி. வேலுப்பிள்ளை ஒரு கவிஞன் சிறுகதை எழுத்தாளன் அரசியல்வாதி நாடாளுமன்ற உறுப்பினர் பத்திரிகை ஆசிரியர். என்.எஸ்.எம். இராமையா தோட்டத்தில் எக்கவூண்டனாக் பணி புரிந்து பின்னாளில் கொழும்பில் இரும்புக் கடையில் அக்கவுண்டனாகப் பணி புரிந்தவர். மல்லிகை.சி.குமார் கால்நடை மருத்துவமனையில் பணியாற்றியவர்.

அதாவது பெருந்தோட்டத்துறை மலையக சமூகத்தை தெழில் ரீதியாக தொழிலாளியாக ஆசிரியர்களாக தோட்ட உத்தியோகத்தர்களாக அரசியல்வாதிகளாக தொழிற்சங்கவாதிகளாக பத்திரிகை ஆசிரியாகள் என பல்வேறு தோற்றப்பாடுகளை உருவாக்கிய போதும் இவர்கள் அனைவரும் ஒட்டு மொத்த மலையகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இலக்கிய கர்த்தாக்களாகவே வாழ்ந்தனர். மலையகம் என்ற மூச்சுக் காற்றையே அனைவரும் சுவாசித்தனர் என்பதை மறுப்பதற்கில்லை.

மலையக இலக்கிய கர்த்தாக்களை இரண்டு வகைப்படுத்தலாம்.

1. மலையக மண்ணைச் சார்ந்தவர்கள்.
2. மலையகத்தை வாழ்விடமாகக் கொண்டவர்கள்.

இவர்கள் தொழில் நிமித்தமோ அல்லது வேறு தொடர்புகளாலோ மலையகத்தில் வாழ்ந்து மக்களின் வாழ்வியலை உள்வாங்கி இலக்கியம் படைத்தவர்கள்.

• முதலாவது பிரிவில் சி.வி. வேலுப்பிள்ளை - கோ. மீனாட்சியம்மாள் - கோகிலம் சுப்பையா - என்.எஸ்.எம். இராமையா - தெளிவத்தை ஜோசப் - மாத்தளை சோமு - சாரல்நாடன் - தமிழோவியன் - பதுளை ராகுலன் - மொழிவரதன் - மலரன்பன் - மாத்தளை வடிவேலன் - அஸுமத் - இப்னு அஸுமத் - அந்தனி ஜீவா - மல்லிகை சி. குமார் - மரியதாஸ் - எம். முத்துவேல் - சாந்திகுமார் - புசலாவ இஸ்மாலிகா - கேகாலை கைலைநாதன் - லெனின் மதிவானம் - இராகலை பன்னீர் - ஜெ. சற்குருநாதன் - திலகா பழனிவேல் - சந்திரலேகா கிங்ஸிலி முதலானோர் உற்பட இன்னும் பலர் இந்த வரிசையில் அடங்குகின்றனர்.

• மலையக மண்ணைச் சாராத யோ. பெனடிக்றபாலன் - செ. கணேசலிங்கம் - நந்தி - புலோலியூர் க. சதாசிவம் - வ.ஐ.ச. ஜெயபாலன் - கே.ஆர். டேவிட் - இதயராசன் - அ.செ. முருகானந்தம் - தி. ஞானசேகரன் என்று பலரை வரிசைப்படுத்தலாம்.

### "தூரத்துப் பச்சை" பிறந்த கதை

"தூரத்துப்பச்சை" நாவலின் பிரதியைத் தமிழ்ப் புத்தகாலய கண. முத்தையாவிடம் காட்டினேன். பிரசுரிக்கலாம் என்றார். ஆனால், அதிகமாக விற்பனை ஆகாது என்றார். சிதம்பர ரகுநாதன் புத்தகத்தைப் படித்து, பிரசுரிக்குமுன் நனவை செய்தார். அந்த சமயத்தில் தோட்டத்தொழிலாளிகள் ஏழைகளாகத் துன்பப்பட்டார்கள். அவர்கள் சரிதையை எழுதவோ, சிந்திக்கவோ யாரும் நினைக்கவில்லை. சங்கத்தலைவர்கள் அவர்களின் புகழைத்தான் நினைத்தார்கள். தொழிலாளியின் துயரங்களை நினைக்க அவகாசமில்லை. நான் ஒன்றும் மகத்தான சேவை செய்யவில்லை.

ஆனால், அவர்களைப் பற்றியும் அவர்கள் எந்த நிலையில் இலங்கை வந்தார்கள் என்பது பற்றியும் உலகம் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதுதான் என் ஆசையாக இருந்தது. "நிறைவேற்றினேன் என்று கோகிலம் சுப்பையா அமெரிக்காவிலிருந்து 15.11. 1995 திகதியிட்டு மு.நித்தியானந்தன் அவர்களுக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

வீரகேசரியின் நூல்வெளியீட்டு வரிசையில் 10ஆவது வெளியீடாக "தூரத்துப்பச்சை" 1973 இல் மறுபிரசுரம் பெற்றது என்ற பதிவினையும் நித்தியானந்தன் சேர் குறிப்பிட்டுள்ளார்.

மலையக இலக்கியத்தில் பல பெண் எழத்தாளர்கள் தற்போது பிரவேசித்துள்ளனர்.

### சிவபாக்கியம் குமாரவேல்

ஒரு முக்கியமான பெண் ஆளுமை பற்றி இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அவர்தான் சிவபாக்கியம் குமாரவேல்.

இவர் 1946 இல் "இதய கீதம்" என்ற தலைப்பில் ஒரு கவிதை நூலினை வெளியிட்டுள்ளார். வசனக் கவிதையில் அமைந்துள்ள இந்த கவிதைகள் தாகூரின் கீதாஞ்சலியின் தாக்கத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது என இலக்கிய விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். மலையக வசனக் கவிதை நடை பாரம்பரியத்தின் முன்னோடியாக சிவபாக்கியம் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளையில் 1970 களில் சிவானந்தன் அவர்களின் "வண்ணச் சிறகு கதைகள்" என்ற வசன கவிதை நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை இந்திய ஒப்பந்தங்களால் தமிழகம் திரும்பி மசின குடியில் வாழ்ந்தவர் சிவானந்தன்.

இந்த நூல் மல்லிகைப்பூசந்தி திலகர் அவர்களினால் மறுபிரசுரம் செய்யப்பட்டள்ளது.

**முற்றும்.**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1097

## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
### கொக்குவில், யாழ்ப்பாணம்

தொன்மைச் சிறப்புடைய இவ்வாலயம் மடாலய நிலையிலிருந்து 1817 ஆம் ஆண்டு, ஆகம முறைப்படி கற்கோவிலாகக் கட்டப்பட்டு, கும்பாபிஷேகமும் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இக்காலத்திலிருந்து ஆதிமூலத்திலே வள்ளி தேவசேனா சமேத சிவசுப்ரமணியப்பெருமானது கருங்கல் சிலா மூர்த்தம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. நீர்வேலி சிவஸ்ரீ நீலகண்டக் குருக்கள் தலைமையிலேயே கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. 1817 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இவ்வாலயம் குமார தந்திர முறைப்படி கட்டப்பட்ட சிறப்புடையது.

அக்காலத்திலே கோயிலில் நித்திய நைமித்திய பூசைகளை பிரம்மஸ்ரீ சின்னப்பா ஐயர் என்பவர் செய்து வந்தார். கோயில் திருப்பணிவேலைகளை இருபத்திநான்குபேர் கொண்ட திருப்பணிச்சபை அமைத்து, நிதிசேகரித்து இவ்வாலய கும்பாபிஷேகத்தை சிறப்பாக நிறைவேற்றி வைத்தமை குறிப்பிடத்தக்கது. அலங்கார மூர்த்தியாக முத்துக்குமாரசுவாமி ஐம்பொன்னால் வார்க்கப்பெற்று அலங்கார உற்சவமும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. மீண்டும் 1890 ஆம் ஆண்டு ஆலயத்தை திருத்தியும், புதுப்பித்தும் திருப்பணிவேலைகள் நடைபெற்று, சிவஸ்ரீ நீலகண்டக் குருக்களால் மகாகும்பாபி'ேகம் நடைபெற்றது.

1915 ஆம் ஆண்டு சைவப்பெருமகனாகிய கோபாலி கந்தையா அவர்கள், ஆறுதிருமுகங்களுடன் கூடிய சண்முகப்பெருமானது எழுந்தருளி விக்கிரகத்தையும், நடராஜப்பெருமானது எழுந்தருளி விக்கிரகத்தையும் ஐம்பொன்னால் வார்த்து, மகாமண்டபத்தில் வள்ளிதேவசேனா சமேத சண்முகப்பெருமானுக்குரிய சந்நிதானத்தையும் அமைத்து, கும்பாபிஷேகத்தையும் சிறப்பாக நிறைவேற்றி வைத்தார். இதே ஆண்டு ஆலயத்திலே கொடித்தம்பம் அமைக்கப்பெற்று துவஜாரோகணமாகி மகோற்சவம் அதிசிறப்புடன் நடைபெற்றுள்ளது.

இக்காலத்திலே திரு. ஆ. சரவணமுத்து குடும்பத்தினரும், திரு.வைத்திலிங்கம் குடும்பத்தினரும் கொடியேற்றத் திருவிழாவை செய்து வரலாயினர். திரு. ஆ. சரவணமுத்து அவர்கள், மஞ்சவனப்பதி ஆலயத்திற்கு முன்பாக காங்கேசன்துறைவீதியை அடுத்துள்ள நான்கு பரப்புக்காணியை ஆலயத்திற்குத் தருமசாதனம் செய்தார். அவ்வாறே ஆலய மகோற்சவ விழாக்களையும் முன்னின்று நடத்திவரலானார். இவரைத் தொடர்ந்து இவரது மகன் இராசையா என்பவர் இப்பணிகளைச் செய்துள்ளார்.

சிவஸ்ரீ நீலகண்டக் குருக்களைத் தொடர்ந்து சிவஸ்ரீ அப்பாத்துரை குருக்கள், மஞ்சவனப்பதி முருகன் தேவஸ்தான மகோற்சவ விழாக்களில் பிரதம குருக்களாக வருகை தந்து திருவிழாக்களை சிறப்பாக நடத்தியுள்ளார்.

கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயம், அன்பர்களின் முயற்சியினாலும், பெருமனதுபடைத்தோரது பக்திநிலையினாலும் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. திரு. ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களுடைய பேரன் திரு. சின்னத்தம்பி சண்முகம் அவர்கள் தமது சொந்தச் செலவில், திரு. தம்பியர் அவர்கள் மூலமாக அர்த்த மண்டப வாயிற் கதவினைத் தேக்க மரத்தில் அழகுற அமைத்துத் திருப-ணி செய்துள்ளார். இக்காலப்பகுதியில் பிரம்மஸ்ரீ செல்லத்துரை ஐயர் ஆலய நித்திய பூசைகளை பிரம்மஸ்ரீ சின்னப்பா ஐயருடன் சேர்ந்து சிறப்பாகச் செய்து வந்துள்ளார்.

புலவர்மணி த.குமாரசாமிப்பிள்ளை அவர்கள், தமிழ் உலகம் அறிந்த பெருந்தகை. இப் பெரியாரது சமய வாழ்கைகையோடு இக்கோயில் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. மஞ்சவனப்பதி முருகன்மீது ஆராத பக்தி கொண்ட புலவர்மணி த. குமாரசாமிப்பிள்ளை அவர்கள், இந்தியாவிலே கல்விகற்றபின் 1920 ஆம் ஆண்டு கொக்குவில் வந்து தமது முதற் பிரசங்கத்தை மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திலே நிகழ்தினார். மஞ்சவனப்பதி முருகன்மீது பதிகம்பாடி தமது நித்திய பாராயணத்தில் அப்பதிகத்தை பாடும் நியமமுடையவராக விளங்கினார். ஆலயத்திலே நடைபெறும் சமயவிடயங்களிலும் ஆர்வமுடை-யவராக தமது வாழ்நாளிலே பெரும்பங்கை இவ்வாலயப்பணிகளிலே செலவிட்டுள்ளார்.

"கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்பதற்கமைய, தாம் வாழும் இடங்களிலே கோயில்களை அமைத்துப் பேணி, தமது வாழ்க்கையைச் செம்மையாக அமைத்துக் கொண்ட இனமாக சைவத் தமிழர் விளங்கியுள்ளனர். இவ்வாறான கொள்கைக்கேற்ப மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தையும் காலத்திற்குக் காலம் பல்வேறு முறைகளில் திருத்தியும், புதுப்பித்தும் பெரும் திருப்பணிகளை இவ்வூரவர்கள் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

1927 ஆம் ஆண்டு பிரம்மஸ்ரீ செல்லத்துரை ஐயர் மங்களம்மா குடும்பத்தினர், தமது புதல்வர் பிரம்மஸ்ரீ குமாரசுவாமி ஐயர் ஞாககார்த்தமாக, விநாயகப்பெருமான் எழுந்தருளி விக்கிரகத்தினை ஐம்பொன்னாலான மூர்த்தியாக உபயம் செய்துள்ளனர்.

திரு. ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களுடைய முன்னோர்கள், மஞ்சவனப்பதி ஆலயத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர்களாக விளங்கினர். இவர்கள் காட்டிய பாதையில் திரு.ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களும் கோயிற் திருப்பணிவேலைகளில் தம்மை ஈடுபடுத்தி வந்துள்ளார். 1934 ஆம் ஆண்டு ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களால் சந்தானகோபாலருக்கு ஆலயம் எழுப்பப்பட்டது. இவ்வாண்டில் வைத்திய கலாநிதி க. நடராசா அவர்களால், நடராஜர் ஆலயம் அமைக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் திரு. வீ. செல்லத்துரை அவர்களால் சண்டேசுவரர் ஆலயம் கற்கோவிலாகக் கட்டப்பட்டதோடு, சண்டேசுவரர் சிலாவிக்கிரகமும் உபயம் செய்யப்பட்டது. இவ்வாறான திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு புனருத்தாரண மகாகும்பாபிஷேகமும் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திற்கு வடகிழக்கில் உள்ள காணியை, திரு. பொன்னம்பலம் காசிப்பிள்ளை அவர்கள் ஆலயத்திற்கு தர்மசாதனம் செய்துள்ளார்.

*வளரும்...*




OM NAMO NARAYANA



**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM**
**L3S 3T8 CANADA**
**001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது

குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

## 26-04-2024 வெள்ளி தொடக்கம் 02-05-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** வீரியத்தோடு செயல்படும் வாரம். காதல் கை கூடும். சுபச்செய்திகள் இல்லம் தேடி வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. தொழில் முன்னேற்றம் தரும். தொலைபேசி தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. திருப்பங்கள் நிறைந்த காலம். பெண்களுக்கு அணிகலன் சேரும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. புது முயற்சிகளை தள்ளிப்போடவும். பெரியோர்களின் ஆதரவு கிட்டும். ஆணவத்தை தவிர்ப்பது நல்லது. பயணத்தால் வெகுமதி கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். திறமைகள் வெளிப்படும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். மெத்தனப்போக்கு மாறும். மேன்மைகள் தொடரும். புதிய நட்பு உருவாகும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். நல்ல நேரத்தையும், நன்மையான காலத்தையும் உண்மையாக சந்திக்கக்கூடிய காலம். மௌன விரதம் இருப்பது நல்லது. தொடுத்த வெற்றியை சந்திப்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்சிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: *1,4,5,9*

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F




**ரிஷபம்:** பிரபல்யம் கிடைக்கும் வாரம். ஆதாயம் மிகுதியாகும். திட்டமிட்ட காரியம் ஜெயமாகும். நட்டமில்லாத நன்மைகள் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. உத்தியோக உயர்வு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. அத்தியாவசிய செலவு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஏராள நன்மைகள் அதிகரிக்கும். கோபத்தையும், வேகத்தையும் தவிர்த்து லாபத்தை அடையும் காலம். எதிரிகள் தொல்லைகள் குறையும். தனவரவு அதிகரிக்கும். வாக்குவாதங்கள் உருவாகும். பணியில் கண்டிப்பு தேவை. பெற்றோர் நலனில் அக்கறை கூடும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். ஆன்மீக சிந்தனைகள் அதிகமாகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். காசு, பணம் சேர்க்கை அதிகரிக்கும். பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகும். பொது வாழ்வில் புகழ் கூடும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். அலைபேசித் தகவல் ஆதாயம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். உத்தியோக உயர்வு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். ஏற்றங்கள் அதிகரிக்கும் காலம். பரபரப்பே இல்லாமல் பணவரவு பெருகும். மங்கல செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். ஆதாயம் பெருகக்கூடிய காலம். கல்வியால் செலவு ஏற்படும். குடும்ப ஒற்றுமை பலப்படும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கும் யோகம் உண்டு. வளம் பெருகும். உடல்நலம் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: *6,4,3,2*

அதிர்ஷ்ட நிறம்: வெளிர் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A




**மிதுனம்:** உழைப்பால் மதிப்பு சேரும் வாரம். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. உறவினரால் செலவு உண்டு. நன்மதிப்பு பெருகும். பாராட்டுக்கள் கூடும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சியைத் தள்ளிப் போடவும். பெரிய திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றி தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். பாக்கியங்கள் அதிகரிக்கும். கசந்த காலம் விலகும். வசந்த காலம் உருவாகும். வலிமையான காலமாக அமையும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப்பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவிகள் சேரும். பொதுபணியில் ஆர்வம் கூடும். சுப காரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்புத்தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டுக் கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. பயணம் நன்மைத் தரும். அச்சத்தைத் தவிர்ப்பது நல்லது. உச்சத்தை அடையும் காலம் ஏற்படும். ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். வியாபார வளர்ச்சி உண்டு. கொடுக்கல், வாங்கலில் பிரச்சனை ஏற்படும். உறவினரால் தொல்லை ஏற்படும். கொள்கையில் பிடிப்பு சேரும். உடல் உபாதை தீரும். பொறுப்புக்கள் கூடும். வருமானம் சேரும். சாதனை நிகழ்த்தக்கூடிய காலம். மேன்மைகள் அதிக அளவில் பெருகும் காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: *9,7,5,3*

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,X




**கடகம்:** சவாலான விஷயங்களை சமாளிக்கும் வாரம். சினத்தை தவிர்ப்பது நல்லது. பணச்சேர்க்கை உண்டு. புத்தாடை சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். மன சந்தோஷம் கூடும். மருத்துவச் செலவு கூடும். அனுகூலமான போக்கு நிலவி வரும். காரிய அனுகூலம் தரும். கடனால் பிரச்சனை வரும். விவசாயம் விளைச்சல் தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வெற்றி கிடைக்கக்கூடிய காலம். நல்லவராக இருப்பீர்கள். வல்லவராக வாழ விரும்புவீர்கள். கனவுகள் நிறைவேறும். ஆசைகள் பூர்த்தியாகும். தகுதியோடும், மிகுதியோடும் வாழக்கூடிய காலமாக அமையும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். விவசாயம் மேன்மை பெறும். வெளியூர் பயணம் ஏற்படும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். பூர்வீக சொத்து சேரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. குதூகலம் சேரும். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். தீய எண்ணம் விலகும். உடன் பிறப்புக்கள் தொல்லை தருவர். திடீர் தனவரவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. மனோ தைரியம் அதிகரிக்கும். மரியாதையான குணம் அதிகரிக்கும். இனிய நட்புக்கள் உருவாகும். பெரிய வெற்றி கிடைக்கும். காதலில் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் வரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: *7,4,1,9*

அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,K



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** எதிர்பார்த்த வளர்ச்சி கிடைக்கும் வாரம். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். ஆரோக்கியம் கூடும். தர்மச் சிந்தனையும் மேலோங்கும். வெற்றிகள் குவியும். எதிரிகள் உதிரியாவார்கள். கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி உண்டு. தொழில் போட்டி மறையும். சோதனைகள் குறையும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். உத்தியோகம் திருப்தி தரும். பணி மாற்றம் ஏற்படும். சிறியவர் முதல் பெரியவர் வரை சிறப்புக்களை சந்திப்பார்கள். கஷ்ட காலங்கள் விலகும் காலம். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். திடீர் வரவுகள் உண்டு. ஆபரணங்கள் வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். கல்வித்துறையில் உள்ளவர்களுக்கு கைமேல் பலன் கிடைக்கும். நிதி பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை தீர்வுக்கு வரும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கலைத்தொழில் கவனம் தேவை. செயல்திறன் வெளிப்படும். மங்களச்செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். காரிய வெற்றி கிடைக்கும். இளமையோடும், பெருமையோடும் காட்சியளிப்பீர்கள். பாராட்டுக்கள் தேடி வரும். பயணம் அனுகூலம் தரும். புதிய வாகனம் வாங்குவீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். முதலீடுகளை தவிர்க்கவும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிட்டும். கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். நன்மைகள் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: *4,7,9,2*

அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**கன்னி:** நினைத்தது நடக்கும் வாரம். திட்டமிட்ட காரியங்கள் நட்டமில்லாமல் நடக்கும். மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடக்கும். கலை ஆர்வம் பெருகும். உடல் உஷ்ணம் உண்டாகும். விபரீத போக்கு மாறும். பூர்வீக சொத்து வந்து சேரும். சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். துன்பங்கள் விலகும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். கற்பனைத் திறன் அதிகரிக்கும். கஷ்ட காலங்கள் விலகி அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். பூர்வீக சொத்து கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். சகோதரியால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். சுபச்செய்தி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. முயற்சிகள் வெற்றி தரும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் வசூலாகும். பொருளாதாரம் வளர்ச்சி பெருகும். மிகையான நன்மை கிடைக்கும். ஆறு வகையான செல்வங்கள் அமைதியாக கிடைக்கும் காலம். தொழில் வழி தொல்லை குறையும். பயணம் ஆதாயம் தரும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் குதூகலம் கூடும். இடையூறுகள் அதிகமாகும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். உடன்பிறந்தவரால் ஆதாயம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: *9,5,4,1*

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,P




**துலாம்:** இல்லம் வளர்ச்சி அடையும். கலையான தோற்றமும், கனிவான பேச்சும் அவசியம். தெளிவான சிந்தனையால் மலிவான நட்புக்கள் விலகும். தந்தையால் நலம் குறையும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத்திறமை அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் உண்டு. நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். பழையக்கடன் ஒழியும். இடமாற்றம் நன்மை தரும். சாதனைகள் நிகழும் காலம். பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். தாய்வழி உறவு நன்மை தரும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் நன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. பூர்வீக சொத்துக்களால் லாபம் உண்டு. சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அகலும். புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். இழந்த கௌரவம் திரும்ப கிடைக்கும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இனிய வாய்ப்புக்கள் கிடைக்கும். திருமணம் கிருபைகள் உண்டு. தெய்வ கடாட்ஷம் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை கூடும். நிதி நிலைமை சீராகும். உதவிகள் கிடைக்கும். விவாத முயற்சி வெற்றி தரும். பிணிகள் நீங்கும். பணியில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கைப்பொருள் களவுப்போகும். விவசாயம் லாபம் தரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அலமேலுமங்கை, அதிர்ஷ்ட எண்: *1,4,5,9*

அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V.A




**விருச்சிகம்:** மரியாதை உயரும் வாரம். நடுத்தரமான நன்மைகள் அடுத்தடுத்து கிடைக்கும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். மனைவியால் மதிப்பு உயரும். திடீர் செலவு ஏற்படும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். எண்ணங்கள் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டாகும். கலைத்தொழிலில் கௌரவம் கூடும். கனவு பலிதமாகும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். வெகுமதிகள் சேரும். உடல்நிலையில் அக்கறை தேவை. சினம் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நட்புகளில் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைவழி தொல்லை தீரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. திருப்பங்கள் நிறைந்த வாரம். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். உத்தியோக இடமாற்றம் உண்டு. கர்ஜனையோடு வலம் வரக்கூடிய காலம். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: *4,8,9,1*

அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,Z

*(தொடர்ச்சி 22 பக்கம்)*

# அன்பின் தொனி - 777

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை - Grace of God**

**சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களை கவனித்துப் பார்த்தேன்**

தாவீதின் குமாரனும் எருசலேமின் ராஜாவுமாகிய பிரசங்கியின் வாக்கியங்கள். மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான். சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன? ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது. சூரியன் உதிக்கிறது, சூரியன் அஸ்தமிக்கிறது; தான் உதித்த இடத்திற்கு அது திரும்பவும் தீவிரிக்கிறது. காற்று தெற்கே போய், வடக்கேயுஞ்சுற்றி, சுழன்று சுழன்று அடித்து, தான் சுற்றின இடத்துக்கே திரும்பவும் வரும். எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது; தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் மறுபடியும் திரும்பும். எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது; அது மனுஷரால் சொல்லிமுடியாது; காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை, கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை. முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்; சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை. இதைப் பார், இது நூதனம் என்று சொல்லப்படத்தக்க காரியம் ஒன்றுண்டோ? அது நமக்கு முன்னுள்ள பூர்வகாலங்களிலும் இருந்ததே. முன் இருந்தவைகளைப் பற்றி ஞாபகம் இல்லை; அப்படியே பின்வரும் காரியங்களைப்பற்றியும் இனிமேலிருப்பவர்களுக்கு ஞாபகம் இராது. பிரசங்கியாகிய நான் எருசலேமில் இஸ்ரவேலருக்கு ராஜாவாயிருந்தேன். வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம்பண்ணினேன், மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையில் அடிபடும்படிக்கு தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார். சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன் இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. கோணலானதை நேராக்கக் கூடாது, குறைவானதை எண்ணிமுடியாது. இதோ, நான் பெரியவனாயிருந்து, எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லா ரைப்பார்க்கிலும் ஞானமடைந்து தேறினேன்; என் மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டறிந்தது என்று நான் என் உள்ளத்திலே சொல்லிக்கொண்டேன். ஞானத்தை அறிகிறதற்கும், பைத்தியத்தையும் மதியீனத்தையும் அறிகிறதற்கும், நான் என் மனதைப் பிரயோ கம்பண்ணினேன்; இதுவும் மனதுக்குச் சஞ்சலமாயிருக்கிறதென்று கண்டேன். அதிக ஞானத்திலே அதிக சலிப்புணடு; அறிவுபெருத்தவன் நோவுபெருத்தவன். **- பிரசங்கி 1: 1-18**

**என் ஞானம் என்னோடேகூட இருந்தது**

நான் என் உள்ளத்திலே சொல்லிக்கொண்டது என்னவென்றால்: வா, இப்பொழுது உன்னைச் சந்தோஷத்தினாலே சோதித்துப்பார்ப்பேன், இன்பத்தை அநுபவி என்றேன்; இதோ, இதுவும் மாயையாயிருந்தது. நகைப்பைக்குறித்து, அது பைத்தியம் என்றும் சந்தோஷத்தைக்குறித்து, அது என்ன செய்யும்? என்றும் சொன்னேன். வானத்தின்கீழ் மனுபுத்திரர் உயிரோடிருக்கும் நாளளவும் பெற்று அநுபவிக்கத்தக்கது இன்னதென்று அறியும்பொருட்டு, என் இருதயத்தை ஞானத்தால் தேற்றிக்கொண்டிருக்கும்போதே, நான் என் தேகத்தை மதுபானத்தால் சீராட்டிக்கொண்டிருக்கவும், மதியீனத்தைப் பற்றிக்கொண்டிருக்கவும் என் உள்ளத்தில் வகைதேடினேன். நான் பெரிய வேலைகளைச் செய்தேன்; எனக்காக வீடுகளைக் கட்டினேன், திராட்சத்தோட்டங்களை நாட்டினேன். எனக்காகத் தோட்டங்களையும் சிங்காரங்க ளையும் உண்டாக்கி, அவைகளில் சகலவகைக் கனிவிருட்சங்களையும் நாட்டினேன். மரங்கள் பயிராகும் தோப்புக்கு நீர்ப்பாய்ச்சுகிறதற்குக் குளங்களை உண்டுபண்ணினேன். வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் சம்பாதித்தேன்; வீட்டிலும் வேலைக்காரர் பிறந்தார்கள்; எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் ஆடு முதலான திரண்ட ஆஸ்திகள் எனக்கு இருந்தது. **- பிரசங்கி 2: 1-7**

**தொடரும்...**

*(15 பக்கத் தொடர்ச்சி)*

# ருவாண்டா (1994) ... இலங்கை (2009) ... காசா (2024) ...

***(இனப்படுகொலைகள் தொடர்பில் கனடா உதயனின் சிறப்புத் தொடர்)***

**(பகுதி - 3)**

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)**

இவர்களில் பலர் ஊடகத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள், களத்தில் பணியாற்றியவர்கள், அற்புதமான தொடர்புகளை பேணி வந்தவர்கள். ஆனால் தமிழ் மற்றும் சிங்கள மொழிப் பிரிவின் தலைவர்களின் தலைமைத்துவம் மற்றும் ஊடகத்திறமை தொடர்ச்சியாகவே கேள்விக்கு உட்படுத்தப்பட்டது. திறமையின்மை தொடர்பில் தமிழோசையின் அந்த "மணியான" தலைவர் மீது உள்ளக விசாரணைகள் நடைபெற்றதும் உண்டு. வெற்று டப்பா போன்று விஷயமே தெரியாமல் தம்பட்டம் அடித்துக்கொள்வதில் அவர் வல்லவராக இருந்தார். துரதிஷ்டவசமாக திறமையின்மை இருந்தாலும் செய்திகளைப் பொறுத்தவரை துறைத்தலைவர்கள் சொல்வதே வேதவாக்கு. பாதிக்கப்பட்ட தமிழர்கள் தரப்பை மையப்படுத்தியே செய்திகள் இருக்க வேண்டும் என்று நான் தொடர்ச்சியாக வாதிட்ட காரணத்தால் பழிவாங்கப்பட்டு, எனக்கு நியாயமாக கிடைக்கவேண்டிய பதவி உயர்வும் அளிக்கப்படாதது மட்டுமல்ல சில அவமானங்களையும் சந்திக்க நேர்ந்தது.

கடைசியாக, உலகெங்கும் உள்ள தமிழர்களின் கருத்துக்களைப் பெற்று, அதை உள்ளடக்கிய ஒரு பெட்டகமாகத் தயாரித்து அன்றைய ஒலிபரப்பில் சேர்த்தோம். அதில் தமிழ் மக்கள் அழுது புலம்புவதும், வேதனையில் விளிம்பில் இருப்பதையும் யதார்த்தமாக நான் பதிவு செய்திருந்தேன். பிரபாகரன் என்ற தனிநபரின் இறப்பு எப்படி உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்திருந்தது என்பதை பிபிசி தொலைக்காட்சியின் உலக ஒலிபரப்பில் ஆங்கிலத்தில் நான் விளக்கினேன்.

இப்படியான அந்த கனமான திங்கட்கிழமை கழிந்தாலும், பிரபாகரன் இறந்துவிட்டார், அல்லது கொல்லப்பட்டுவிட்டார் என்றால் அதற்கான ஆதாரங்கள் ஏன் வெளியாகவில்லை. போர் முடிந்திவிட்டது என்று எதன் அடிப்படையின் அரசு கூறுகிறது என்ற சந்தனை அன்று முழுவதும் எனக்குள் ஓடிக்கொண்டிருந்தது.

வன்னியில் இருந்த அனைத்து தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட நிலையில் அந்த இரவு மிகவும் நீண்டிருந்தது.

ஆனால், போர் முடிந்துவிட்டதாக அரசு அறிவித்ததன் பின்புலத்தில் பெரும் அவலம் இருந்தது...அது அடுத்த வாரம்... ***(தொடரும்...)***

# மனிதனின் சுயநலத்தால் இயற்கை கண்ணீர் விடுகின்றது: மன்னாரில் போதைப்பொருள் மாபியா போல் மணல் அகழ்விற்கு பெரிய மாபியாக்கள் உருவாகிவிட்டன

**கட்டுரையாளர்: வி.எஸ். சிவகரன்**



*(11ம் பக்கத் தொடர்ச்சி)*

இவற்றை ஒழுங்கு முறையாக சீர் படுத்த முடியவில்லை. அதற்கு அனுமதி வழங்குகின்ற திணைக்களங்கள் லஞ்சம் பெற்றுக்கொண்டு அனுமதி வழங்குகின்றன. அதனால் கட்டுப்படுத்துவதில் பல்வேறு விதமான சவால்கள் உள்ளன.

உலகில் காபன் படிவு அதிகமானது என காலநிலை தொடர்பான டுபாய் மாநாட்டில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

போதை பொருள் மாபியாவை போல் மணல் அகழ்விற்கு பெரிய மாபியாக்கள் உருவாகிவிட்டன. இதை கட்டுப்படுத்த வேண்டிய காவல்துறை, புவிச்சரிதவியல் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, வனத்திணைகளம், பிரதேச செயலகங்கள் ஆகியன லஞ்சம் பெற்றுக் கொண்டு இயற்கையை ஏலம் கூறி விற்பனை செய்கின்றனர்.

மணல் அள்ளிச் செல்லும் டிப்பரிலிருந்து வழிகிறது ஆற்றின் கண்ணீர் என்பதை எந்த அதிகாரியும் புரிந்து கொண்டதாக தெரியவில்லை.

இதில் பல ஆற்றங்கரைகளில் அதிக அளவில் விவசாய செய்கையில் ஈடுபடுகின்றனர். ஆனால் தற்போது அந்த இடங்கள் எல்லாம் உவர் நீர் அதிகரித்து விட்டதால் விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குட்படுகிறது விவசாயம் இல்லாவிட்டால் மனிதன் உயிர் வாழ முடியுமா?

இந்த ஆறுகளில் ஒரு மண் கூட்டம் உருவாக 08 தொடக்கம் 12 வருடங்கள் தேவை என கூறப்படுகிறது. ஆனால் தற்போது ஆறுகள் மணல் இன்றி சேத்து நிலமாக உள்ளன. இதில் பல இடங்களில் நீதிமன்றங்கள் தடை செய்த போதும் கூட அதிகாரிகளின் ஆதரவுடன் மணல் அபகரிக்கப்படுகிறது.

உள்ளூர்வாசிகள் மட்டுமின்றி வெளியிடத்து நபர்களாலும் மணல் கொள்ளை சர்வசாதாரணமாக நடைபெறுகிறது. இதில் அரச படையினரும் கூட ஈடுபட்டு வருகின்றனர். சீமந்து, கல், சாடி, தூண் போன்றவற்றை உற்பத்தி செய்து தமது முகாம்களுக்கு முன்னுக்கு வைத்து விற்பனை செய்தும் வருகின்றனர்.

அதேபோல் கடற்கரை பகுதிகளிலும் மண் அகழ்வதால் பல ஊர்களில் கடல் தண்ணி உள்ளே வருகிறது. எனவே இந்த இயற்கை வளச் சுரண்டலுக்கு அரசியல்வாதிகள் பின்னணியிலும் அதிகாரிகளின் ஆசீர்வாதமும் கிடைப்பதால் எப்படி தடுப்பது?.

பல போராட்டங்கள் பல கூட்டங்கள் பல கள விஜயங்கள் எல்லாம் நடை பெற்றும் எந்த பயன் அளிக்கவில்லை. ஆகவே இயற்கைக்கு எதிரான மனிதனின் செயல்பாடு பாரிய இயற்கை அனர்த்தத்தை ஏற்படுத்தும் நில அதிர்வு, சுனாமி, அதிக மழை, புயல்,அதிக வெப்பம் என்பன எதிர்காலத்தில் நிகழலாம் என நாசா உட்பட பல சூழலியல், மற்றும் காலநிலை ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தது போதும் மனிதன் இயற்கையை அழித்து தனது சொகுசு வாழ்வியலை உயர்த்தும் நோக்கை கைவிட்டதாக தெரியவில்லை.

இவர்களுக்கு உதவியாக அதிகாரிகளும் உள்ளதால் சட்டவிரோத மண் அகழ்வு, காடழிப்பு போன்றவற்றை நிறுத்துவது என்பது இலகுவான விடயம் அல்ல.

ஆகவே இந்த அதிகாரிகளுக்கும் சட்டவிரோத மணல் அகழ்வாளர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி இயற்கையில் மணலும் மரமும் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

வாழ்க்கைக்கும் வாழ்வியலுக்கும் அது எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்த்த வேண்டும். இல்லையேல் இதை எந்த சந்தர்ப்பத்திலும் தடுக்க முடியாது. இயற்கைக்கு எதிரான செயற்பாட்டில் மனிதன் தோற்றே போவான் இயற்கையின் சமநீதி அறம் எவருக்கும் எதற்கும் இடம் கொடுக்காது குற்றம் என்று தெரிந்தும் தண்டிக்க முடியாத சட்டம் ஊழல் என்று தெரிந்தும் ஒழிக்க முடியாத சட்டம் தீமை என்று தெரிந்தும் தடை செய்ய முடியாத சட்டம் இந்த நாட்டின் ஜனநாயகம் இதுதான்.

ஆகவே "இயற்கையை காப்போம் இயல்பாக வாழ வழி தேடுவோம்". ஆகவே இயற்கையை காப்போம் இயல்பாக வாழ வழி தேடுவோம். எனவே வள்ளுவம் கூறுவது போல் "செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல்".

**தொகுப்பு: எஸ்.றொசேரியன் லெம்பேட்**

## கடந்தவையும் கடப்பவையும் – (95)

வெண்மணற் தரையும் ஆங்காங்கே - சிறிய
பற்றைகளின் நிரையும் வரவேற்க

முன்பின் போயறியா ஊரைநோக்கி
முன்னால் போபவரை பின்தொடர

கிடுகினால் வேயப்பட்ட நெடியதோர் கூடாரம் - அதில்
பெருமளவிற் சனக்கூட்டம் அலைமோத

வந்தவர் எல்லோர்க்கும் வந்த வரிசைப்படி - அவரவர்
சென்று சேர்தற்கு போக்குவரத்து ஒழுங்கும் அங்கு

அதற்கிடையில் களைத்து வந்தவர்க்கு
கொடுக்கப்பட்டது பாணோடு சம்பலும் சுடுதேநீரும்

முகம் கழுவ முழுநீளவரிசையங்கு - சொந்த
அகம் இழந்து வந்தபின்பு எல்லாமும் நீளம் தான் - நாங்கள்

அப்பவும்தான் வரிசையில் நிற்கவில்லை - அங்கும்கூட
எப்பவும்போல் பெரியவர்கள் உதவியதால்

எல்லாமே இலகுவாச்சு பெறுவதற்கு - அப்படியே
நல்லதொரு வாகனமும் வருமென்று காத்திருக்க

வந்தது உழவு இயந்திரம் எங்களுக்காய்
முந்தி ஒருபோதும் ஏறியிரா வண்டியது

ஏதுமற்ற ஏதிலிகளுக்கு அப்போ அது
'ஏரோப்பிளேன்'
பாதுகாப்பைப் பரிசீலித்து ஒவ்வொருவராய் ஏற்றுகிறார்

இலகுவாக ஏறுதற்கு கதிரைகளும் வைத்துள்ளார்கள்
சுலபமென நினைப்பவர்கள் சுயமாக ஏறிக்கொண்டோம்

வன்னிமண்ணின் வனப்பினை எந்தவொரு மறைப்புமின்றி
நன்றாக இரசித்தபடி தொடங்கியது பயணமது

சூரியனின் சுட்டெரிக்கும் வெம்மையும் - அதற்கேற்ப
குளிர்வழங்கும் மரங்களின் நிழல்களும் - அதிலும்

சுறுசுறுப்பாய் பகட்டேதுமில்லா இயல்பாய் வாழும்
பொறுப்புள்ள மனிதர்களும் ஆங்காங்கு

துவிச்சக்கர வண்டிகளில் சாக்கு மூட்டைகளும்
பளிச்சென்று பழுங்கள் வெளித்தெரியும் வாழைக்குலைகளுமாய்

வீதிகளில் திரிவோரைப் பார்க்கும் போது - அங்கு
வேலையற்றோர் யாருமே இருக்கார் போல்த்தெரிகிறது

வெளியில் நடப்பதைப் பார்த்து ஊரை அறிந்தாலும் - உடலின்
உள்ளுக்குள் யாருமறியாது பெரும்போரொன்றும் நடக்கிறது

வீதியில் பள்ளம் திட்டிகள் வரும்போது - பெரும்
பீதியாய் உள்ளது உள்ளுறுப்புக்கள் இடம்மாறிவிடுமோ என

முன்னுள்ள எஞ்சினும் பின்னுள்ள பெட்டியும் - சிலசமயம்
ஒன்றன்பின் ஒன்றாகப் போகாது போனாலும் - நாங்கள்

சொன்ன இடம் போய்ச் சேரும்போது - அவை
நல்லபடி வந்து நின்றன
சொல்ல வாத்தையில்லா மனங்கவர்ந்த அவ்விடத்துப்

பெருமைகள்தான் எத்தனை! எத்தனை!

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

## இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** பிரயாணம் பெருமை தரும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பயன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. நட்பில் பிரிவு ஏற்படும். திட்டமிட்ட காரியம் ஜெயமாகும். குடும்ப மேன்மை அதிகரிக்கும். கட்டுமானப் பணியில் உள்ளவர்களுக்கு கௌரவம் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். பணவரவு அதிகரிக்கும். தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் அற்புதமான காலம். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்புக் கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். இன்னல்கள் அகலும். குடும்ப தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கல்வியில் மந்த நிலை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 7,2,4,8
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H





**மகரம்:** உன்னதம் நிறைந்த வாரம். உலோகத்தொழில் உயர்வு தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பயணம் லாபம் தரும். எண்ணிய காரியம் கைகூடும். ஏற்றங்கள் அதிகரிக்கும். எதார்த்தமான சிந்தனையில் ஏறுமுகம் காணக்கூடிய ஆறுதலான காலமாக அமையும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடும். புதிய தொழில் முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைவாற்றல் பெருகும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை கூடும். தன்னம்பிக்கை கூடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. எடுத்த காரியத்தில் ஏற்றம் கிட்டும். படித்த கல்விக்கு உத்தியோகம் கிடைக்கும். உபயோகமான காலம். புதிய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்ப்பார்ப்புக்கள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். பூமி சேர்க்கையுண்டு. ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். அதிகாரம் உயரும். எதிர்பார்த்த வரவுகள் கிடைக்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,1,2
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,I




**கும்பம்:** வம்பு தும்புகள் ஒழியும் வாரம். மகிழ்வான நிகழ்வுகளை சந்திக்கக்கூடிய சந்தோஷமான காலம். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். எண்ணிய காரியம் கைகூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். கஷ்ட காலம் விலகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். மன உற்சாகம் அதிகரிக்கும். வாகன அபிவிருத்தி ஏற்படும். வழக்குகளால் தொல்லை உண்டு. இயந்திர தொழிலால் லாபம் உண்டு. கடன் தொல்லைகள் குறையும். கூட்டுப் பிரார்த்தனையில் மோசடி ஏற்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். புண்ணிய ஸ்தலப் பயணம் உண்டு. ஆரோக்கியம் சீராகும். நல்லோர் நட்பு கிட்டும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். உடன் பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். நிதி நிலைமை சீராகும். பணப்பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். சிறப்புக்கள் சேரும். தன்மானத்தோடு வாழும் காலம். தயாள குணம் மேலோங்கும். போட்டி, பொறாமைகள் விலகி நன்மைகள் பெருகும். வீரியத்தோடு செயல்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஹயத்துவார், அதிர்ஷ்ட எண்: 2,9,4,6
அதிர்ஷ்ட நிறம்: கருநீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,G




**மீனம்:** பணிவான பேச்சு அவசியம் தரும் வாரம். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். கனத்த வருமானத்தை பார்த்துக் கொள்ளும் காலம். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவி வாய்ப்பு வரும். பணியில் உயர்வு உண்டு. பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். மனோபயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். கமி'ன் தொழில் லாபம் தரும். சுபகாரியம் கைகூடும். சொத்துச் சேர்க்கை உண்டு. அறிமுகம் இல்லாதவர்கள் மூலமாக ஆதாயம் கிடைக்கும். மறைமுக எதிரிப்புகள் அதிகமாகும். செல்வமும், புகழும் சேரும். பணியில் கண்டிப்பு அவசியம். கல்விச்செலவு கூடும். வழக்கு முடிவிற்கு வரும். பக்குவமான பேச்சு அவசியம். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. மிகையான நன்மை கிடைக்கக் கூடிய மிக அற்புதமான காலம். மரபை மீறிப் பேசிய உறவுகள் மனதாரப் பாராட்டும் காலம். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். நீண்டநாள் பிரச்சனை முடிவிற்கு வரும். தாய் வழி உறவில் ஆதாயம் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,V

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages










26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1464 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday April 26, 2024

# வலம்புரி நாளிதழின் ஆசிரியருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு – யாழ். ஊடக அமையம் கண்டனம்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் முன்னணி நாளிதழ்களுள் ஒன்றான "வலம்புரி" பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் வடக்கு ஆளுநரின் முறைப்பாட்டின் பேரில் 22-04-2024 அன்று திங்கட்கிழமை இலங்கை காவல்துறையின் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாண ஊடக அமையம் தனது வன்மையான கண்டனங்களை பதிவு செய்தது.

யாழ்ப்பாண ஊடக அமையம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேவலம்புரி நாளி-தழின் ஆசிரியருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு - யாழ். ஊடக அமையம் கண்டனம்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களான நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் சி.வி.கே.சிவஞானம் ஆகியோரை சந்தித்த கனடா "உதயன்" பிரதம ஆசிரியர்





இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களான நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் சி.வி.கே.சிவஞானம் ஆகியோ-ரை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த கனடா உதயன் நிர்வாக ஆசிரி-யர் லோகேந்திரலிங்கம் அவர்கள் சந்தித்து தற்போதைய அரசியல் சூழல் தொடர்பில் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம் வருகை தந்த லோகேந்திரலிங்கம் இருவரையும் மரியாதை நிமித்தம் அவர்களது இல்லத்தில் சந்தித்து தற்போதைய அரசியல் நிலவரம், எதிர்கால நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டார்.

இதேவேளை கனடா வாழ் அன்பர்கள் மற்றும் ரொறன்ரொ மனித நேயக்குரல் அமைப்பின் நிதிப் பங்களிப்பில் இடம்பெறும் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பிலும் நேரில் ஆராய்ந்து சென்று பார்வையிட்டார்.

# கனடா வாழ் ஈழத்துக் கலைஞர் ரஜீவ் சுப்பிரமணியத்தின் தயாரிப்பில் தமிழகத்தில் வரவேற்பைப் பெற்றுள்ள குனைநச திரைப்படம்

ஈழத்தமிழர்களுக்கு பெருமைமிகு அறிமுகமாய் கனடா வாழ் ஈழத்துக் கலைஞர் ரஜீவ் சுப்பிரமணியத்தின் தயாரிப்பில் தமிழகத்தில் வரவேற்புக்களைப் பெற்று திரையிடப்பட்டுள்ள **Finder** திரைப்படம் தற்போது இரண்டாவது வாரத்தில் காலடி எடுத்து வைத்துள்ளது. தென்னிந்தியாவில் கனடா "ஆரபி படைப்பகம்" சார்பில் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களின் தயாரிப்பில்உருவாகி தற்போது தமிழ் நாட்டின் திரையரங்குகளில் **Finder** திரைப்படத்தின் இயக்குனர் வினோத் ஆவார். இவர் ஏற்கனவே பல திரைப்படங்களின் இணை இயக்குனராக பணியாற்றிவுள்ளார். நம்மவர்களுக்கான களம் என்னும் தொனியில் எமது கனடா வாழ் கலைஞரும் தயாரிப்பாளருமாகிய ரஜீவ் சுப்பிரமணியத்தின் சிந்தனையின் நிமித்தம் பல ஈழத்துக் கலைஞர்களுக்கும் இந்த படத்தில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதையும் குறிப்பிடத்தக்கது. கவிப்பேரரசு அவர்கள் நீண்ட நாட்களுக்கு பின்னர் நான்கு முத்தான பாடல்களை எழுதியுள்ளார் என்பதும் ஈழத்தில் இசைத் துறைக்குள் வலம் வரும் வெற்றி சிந்துஜன் என்னும் இளைய இசைக் கவிஞரை தென்னிந்திய திரைத்துறைக்குள் இந்த திரைப்படம் அறிமுகப்படுத்தியிருப்பதில் நாம் பேருவகையும் பெருமையும் கொள்கின்றோம் .

**Finder** திரைப்படம் தொடர்ந்து பல வெற்றிகளை ஈட்டி சாதனைகள் படைக்க வேண்டும் என கனடா உதயன் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# கனடாவில் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய 'நூல்களின் சங்கமம்' புத்தகக் கண்காட்சி











சென்ற சனிக்கிழமை 20-4-2024 அன்று கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 30வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமா-கவும், உலகப்புத்தகத் தினத்தைக் கொண்டாடும் முகமாகவும் ரொறன்ரோவில் கனடியத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டும், விற்பனைக்கும் கனடியத் தமிழ் எழுத்தாளர் இணையத்தால் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# தமிழ்மொழியின் சொல்லாற்றலை பறைசாற்றிய சிங்கப்பூரின் தமிழ் மொழி விழா 2024

சிங்கப்பூர் வளர்தமிழ் இயக்கம் மற்றும் தமிழ்மொழி கற்றல் வளர்ச்சி குழுவின் ஆதரவோடு தொடங்கப்பட்ட தமிழ்மொழி விழா தன்னுடைய 18வது ஆண்டு விழாவை இவ்வாண்டு சிங்கப்பூரில் மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.

இந்த விழாவின் ஓர் அங்கமாக வளர்தமிழ் இயக்கத்தின் ஆதரவோடு அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர்) ஆண்டுதோறும் தமிழன்னைக்கு விழா எடுத்துச் சிறப்பித்து வருகிறது, அதன் தொடர்ச்சியாக 'தமிழ்மொழியின் சொல்லாற்றல்' என்ற தலைப்பில் 11வது ஆண்டு விழாவை உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் ஏப்ரல் 14ஆம் தேதி மாலை மிகச் சிறப்பாக நடந்தேறியது.

நிகழ்ச்சியின் துவக்கமாக மழலைச்செல்வம் செல்வி. சாகித்யா செந்தில் அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்து பாடி நிகழ்ச்சியைத் துவங்கினார், அவரது பாடல் அரங்கில் உள்ள அனைவரின் பாராட்டைப்பெற்றது. விழாவிற்கு வருகை புரிந்திருந்த அனைவரையும் வரவேற்று சங்கத்தின் தலைவர் திரு ப. கருணாநிதி அவர்கள் வரவேற்புரையாற்றினார், எங்கள் அமைப்பு கடந்த 25 ஆண்டுகளாகச் சிங்கப்பூருடன் தன்னை இணைத்துக்கொண்டு, அனைத்து உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்துத் தமிழுக்கு ஆற்றும் பணிகள் தவிர, கலாச்சாரம், சமூக, இளைஞர் முன்னேற்றப் பணிகளையும் செய்து வருகிறது என்று கூறினார்.



மேலதிகச் செய்தியைப் படிக்க **www.uthayanews.ca** என்னும் இணையத்தளத்தைப் பார்க்கவும்.